பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 18 புதன்கிழமை (01.06.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :187

# புலனாய்வுப் பிரிவு அதிகாரி நடுவீதியில் சுட்டுக்கொலை!

## நாரஹேன்பிட்டிப் பகுதியில் சம்பவம்
## மோ.சைக்கிளில் வந்தோர் கைவரிசை



கொழும்பு,ஜூன்1

**இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளையிடும் உயர் அதிகாரியான மேஜர் துவான் நிஷாம் முத்தலிப் நேற்றுக் காலை கிருலப்பனைப் பகுதியில் நடுவீதியில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார்.**

**பாதுகாப்பு அதிகம் உள்ள கொழும்பு, நாரஹேன்பிட்டி, பொல்ஹேன் கொட வீதி விளக்குச் சமிக்ஞை அருகில் ஆயுததாரிகள் இருவர் அவரைச் சுட்டுக்கொன்றனர். காலை 7.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. புலிகளின் பகுதிகளுக்குள் 'ஆழ ஊடுருவித்தாக்கும் இராணுவ அணியின்' முக்கிய புள்ளியாக இருந்தவர் முத்தலிப். புலிகளுக்கு எதிரான பல்வேறு இரகசிய நட வடிக்கைகளில் அவர் முக்கிய பங்காற்றியுள்ளார். அவர்களின் தாக்குதல் இலக்குப் பட்டியலில் முதலிடத்தில் இருந்தவர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

நேற்றுக்காலை தனது உத்தியோகபூர்வ வாகனத்தில் கடமைக்குச் சென்றுகொண்டிருந்த போது அவர் சுடப்பட்டார். 'பொல்ஹேன்கொட வீதிச் சமிக்ஞை விளக்குக்கு அருகில் காத்திருந்த இருவர் அவரைச் சுட்டுக்கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர்' - என்று நாரஹேன்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து சில கிலோமீற்றர் தொலைவிலேயே முத்தலிப்பின் வீடு உள்ளது. விஜயகுமாரதுங்க மாவத்தையில் உள்ள வீதி விளக்குச் சமிக்ஞையை நோக்கி

(02ஆம் பக்கம் பார்க்க)

## முத்தலிப்புக்கு பதவி உயர்வு

கொழும்பு,ஜூன்1

நேற்றுச் சுட்டுக்கொல்லப்பட்ட புலனாய்வுத் துறை அதிகாரி மேஜர் முத்தலிப் லெப்டினன்ட் கேணலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார் என்று இராணுவ தலைமைப்பீடம் நேற்றிரவு அறிவித்தது.

மேஜர் தரத்தில் இருந்த முத்தலிப் இதுவரை காலமும் ஆற்றிய சேவைகளுக்காக அவருக்கு இப்பதவி உயர்வு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த)

## 11 ஆவது நபர்

கொழும்பு,ஜூன்1

புலிகளே இராணுவ மேஜர் துவான் நிசாம் முத்தலிப்பின் கொலைக்குக் காரணமானவர்கள் என்று இராணுவம் குற்றஞ்சாட்டியுள்ளது.

சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டதற்குப் பின்னர் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவைச் சேர்நத அதிமுக்கிய உறுப்பினர்கள் 11 பேரை புலிகள கொலை செய்துள்ளனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

மேஜர் ரி.என்.முத்தலிப் ஒரு சிறந்த இரா

(16ஆம் பக்கம் பார்க்க)



மேஜர் முத்தலிப் சுடப்பட்ட இடத்தில் அவரது கார் தரித்து நிற்பதையும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வதையும் இங்கு காணலாம்.

## மர்மப் பொருள் வெடித்ததில் இளைஞர் பலி; மூவர் காயம்!

### கச்சாய்ப் பகுதியில் நேற்றுமாலை அனர்த்தம்

கச்சாய், பகுதியில் மர்மப்பொருள் வெடித்ததில் இளைஞர் ஒருவர் பலியானார்; மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கச்சாய் தெற்கு, கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி காண்டீபன் (வயது -24) என்பவரே பலியானவராவார்.

அதே இடத்தைச் சேர்ந்தவர்களான அப்புததுரை பார்த்தீபன் (வயது-20), சபாநாயகம சங்கர் (வயது-20), குலசேகரம ரசிகா (வயது-7) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர்.

ஒரு கிணற்றின் அருகில் இளைஞர்கள் மூவரும் வெடிக்காத நிலையில் இருந்த மர்மப் பொருள் ஒன்றைப் பிரித்துப்பார்க்க முயன்றபோதே இந்த அனர்த்தம் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவத்தில் வீதியால் சென்றுகொண்டிருந்தவேளையே ரசிகா காயமடைந்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்த கிணற்றின் ஒரு பகுதியும பலத்த சேதமடைந்து காணப்பட்டது. உயிரிழந்த இளைஞனின் சடலம் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. காயமடைந்த மூவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்றுவருகின்றனர். (த-12-74)

## கருணாவின் பிறழ்வுக்கும் காரணமானவர் முத்தலிப்!

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட முன்னாள் தளபதியான கருணா, அந்த அமைப்பில் இருந்து பிறழ்வதற்கு - பிரிவதற்கு - முக்கிய காரணியாகச் செயற்பட்டவர் மேஜர் முத்தலிப் என்று 'நிதர்சனம்' இணையத்தளம் தெரிவித்துள்ளது.

தப்பியோடிய கருணா கிழக்கிலிருந்து கொழும்புக்கு வருவதற்குத் தனது நண்பரான ஐ.தே.கவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாகிர் மௌலானா மூலம் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தவரும் இவரே என்று அந்த இணையத்தளம் தெரிவித்தது.

இலங்கை இராணுவத்தின் சிறந்த புலனாய்வுத்துறை அதிகாரியாகக் கடமையாற்றியவர் முத்தலிப். வவுனியாவில் புளொட் அமைப்பின் இராணுவப் பிரிவுத் தலைவராக இயங்கி வந்தவரான மாணிக்கதாசனின் நெருங்கிய சகாவாகவும் செயற்பட்டவர். மாணிக்கதாசன் பின்னர் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டார். வவு

(02ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பின் பாதுகாப்பை உடன் பலப்படுத்த ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு,ஜூன்1

கொழும்பு நகரத்தின் பாதுகாப்பை உடனடியாகப் பலப்படுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க முப்படைத் தளபதிகளுக்கும் பொலீஸ்மா அதிபருக்கும் நேற்றுக் காலை அவசர உத்தரவு விடுத்திருக்கிறார்.

நேற்றுக்காலை நாரஹேன்பிட்டியில் இராணுவப் புலனாய்வுத் துறையின் உயர்மட்ட அதிகாரி மேஜர் முத்தலிப் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்தே ஜனாதிபதி இந்த அவசர நடவடிக்கையை மேற்கொண்டார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### புத்தர் சிலை அமைந்த இடத்தில்

## புதிய கட்டடங்கள் அமைக்க நீதிமன்றம் இடைக்காலத்தடை

திருகோணமலை,ஜூன்1

திருகோணமலை நகரப்பகுதியில் புத்தர்சிலை அமைக்கப்பட்ட இடத்தில் புதிய கட்டடங்களை அமைக்கவோ, அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ளவோ கூடாது என திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத்தடை உத்தரவு ஒன்றை நேற்றுப் பிறப்பித்துள்ளது.

மாவட்ட நீதிபதி ஆர்.தியாகேந்திரன் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## நெருக்கடி நிலைமைகுறித்துப் புலிகள் சர்வதேச பிரதிநிதிகளுக்கு விளக்குவர்

### அடுத்த வாரம் கிளிநொச்சியில் முக்கிய ராஜீய சந்திப்புக்கள்

கிளிநொச்சி,ஜூன்1

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான அரசியல் நிலைமை குறித்து விடுதலைப் புலிகள் சர்வதேசப் பிரதிநிதிகளுக்கு விளக்கவுள்ளனர்.

இலங்கைக்கு உதவும் நாடுகள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கும் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதர்களுக்கும் புலிகள் தமது நிலைமை விளக்குவர்.

ஆழிப்பேரலை [illegible] கள் கடந்த நிலையிலும் [illegible] களுக்கான பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படவில்லை. அதன் மூலம் சமாதான முயற்சிகளுக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட புத்தூக்கமும் கிடைக்கவில்லை. இந்த நிலைமை புலிகளையும், தமிழ் மக்களையும் சீற்றத்துக்கும் விசனத்துக்கும் உள்ளாக்கியுள்ளது.

இந்நிலையில் சர்வதேச சமூகத்தின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ரெலிக்கொம்மில் தீவிபத்து!


யாழ்ப்பாணம்,ஜூன்1

யாழ். ரெலிக்கொம் நிறுவனத்தின் அலுவலகப் பகுதியில் நேற்றுமாலை திடீரென தீவிபத்து ஒன்று ஏற்பட்டது. இந்த விபத்தில் பல லட்சம் ரூபா பெறுமதியான தொலைபேசிக் கேபிள்கள் எரிந்து நாசமாகின.

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நேற்று மாலை யாழ். ரெலிக்கொம் அலுவலகத்தில் ஏற்பட்ட தீயை மாநகரசபையின் தீ அணைப்புப் பிரிவினர் அணைப்பதையும், தீயில் எரிந்த சில கேபிளகள் மற்றும் உபகரணங்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: பகீரதன்)

# பொதுக்கட்டமைப்பு விடயத்தில் இந்தியா நடுநிலை வகிக்கும்!

## ஜனாதிபதியிடம் அந்நாட்டுத் தூதர் தெரிவிப்பு

கொழும்பு,ஜுன்1

ஆழிப்பேரலையின் பின்னரான நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காக இலங்கை அரசும், விடுதலைப் புலிகள் இயக்கமும் இணைந்து உருவாக்கவுள்ள பொதுக்கட்டமைப்பு விடயத்தில் நடுநிலைப் போக்கைக் கடைப்பிடிக்க இந்தியா தீர்மானித்திருப்பதாகத் கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் நேற்று உதயனுக்குத் தெரிவித்தன.

கடந்த வாரம் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பொன்றின்போது கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் நிருபமா ராவ், புதுடில்லியின் இந்த நிலைப்பாட்டை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு விளக்கிக் கூறியிருக்கிறார் என அந்த வட்டாரங்கள் மேலும் கூறின.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்படவுள்ள இந்தப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் இந்தியா கவனஞ்செலுத்தியிருப்பதாகவும், இந்த விடயத்தில் நடுநிலையான கொள்கையைக் கடைப்பிடிக்க இந்தியா தீர்மானித்துள்ளதாகவும் மேற்படி சந்திப்பில் இந்தியத் தூதர் விளக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், இவ்வார இறுதியில் புதுடில்லியில் பிரதமர் மன்மோகனைச் சந்திக்கவுள்ள ஜனாதிபதி சந்திரிகா, உத்தேசப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான யோசனைகளின் நகலொன்றை அவரிடம் வழங்குவாரெனத் தெரிவிக்கப்படுகிறது. நாளை வியாழக்கிழமை ஜனாதிபதி இந்தியா செல்கிறார். (க-3)

# ஊர்காவற்றுறையில் இன்று நாட்டுப்புறப் பாடல் போட்டி

யாழ்ப்பாணம்,ஜுன்1

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர், பணிமனையினால் கலை இலக்கியப் பெருவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் நாட்டுப் புறப்பாடல் போட்டிகள் இன்று காலை 9 மணி முதல் உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் மாணவர்கள், கலைமன்றங்களின் பிரதிநிதிகள் இந்தப் போட்டிகளில் பங்கு கொள்வர்.

தீவகக் கல்விவலய அழகியல பாட உதவக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஸ்ரீரங்கராணி இராமச்சந்திரன் தலைமையிலான மத்தியஸ்தர்கள் போட்டிகளை நடத்துவர். (எ)

# பஸ் சேவை விஸ்தரிப்பு ஆரம்ப வைபவம்

யாழ்ப்பாணம்,ஜுன்1

இலங்கை போக்குவரத்துச் சபையின் 769 ஆம் இலக்க பஸ் சேவை யாழ்ப்பாணத்தில் இருந்து கைதடி வடக்கு நவபுரத்திற்கு விஸ்தரிக்கப்படவுள்ளது. இந்த விஸ்தரிப்பின் தொடக்க வைபவம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு நவபுரம் ஸ்ரீதுர்க்கை அம்மன் ஆலய முன்றலில் இடம்பெறவுள்ளது.

நவபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சங்கரன் தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ். சாலைப் பொதுமுகாமையாளர் க.கணேசபிள்ளை கலந்துகொள்ளவுள்ளார். (த-203)

# ஜான் பீற்றர்ஸன் - ஹொக்லண்ட் ஒஸ்லோவில் நேற்று சந்தித்துப் பேச்சு!

கொழும்பு,ஜுன்1

இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் குறித்தும், இலங்கையில் தற்போது நிலவும் நெருக்கடி அரசியல் நிலை தொடர்பாகவும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொகலண்ட் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான பீற்றர்ஸனை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ஒஸ்லோவிலுள்ள வெளிவிவகார அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கடந்த வருட செயற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட இதர விடயங்கள் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டது என்று ஒஸ்லோவில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்களே இருப்பதால் இலங்கையில் நடக்கும் சில விடயங்களில் கணகாணிப்புக் குழுவினால் தலையிட முடியாது உள்ளதாக இந்தச் சந்திப்பின்போது ஹொக்லண்ட் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் கொழும்பிலுள்ள வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்த விடுதலைப் புலிகள் தொடர்பான கருத்துகள் குறித்தும் இந்தச் சந்திப்பின்போது பிரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.(க-3)

# யாழ். ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய மின் தொழில்நுட்பவியலாளர் பணிநிறுத்தம்

## நேற்றுடன் ஒப்பந்தம் முடிவடைந்ததால்!

யாழ். போதனாவைத்தியசாலை மின் விநியோகப் பகுதியில் கடமையில் ஈடுபட்டுவந்த மின்சாரசபை மின் தொழில் நுட்பவியலாளர்கள் தமக்கான ஒப்பந்தகாலம் முடிவடைந்ததால் நேற்றுமுதல் தமது பணியை நிறுத்தியுள்ளனர்.

வைத்தியசாலை மின்விநியோகப் பணியினை வருடாந்த ஒப்பந்த அடிப்படையில் இலங்கை மின்சாரசபையே மேற்கொண்டுவந்தது.

இப்பணியினை வேறு தனியாரிடம் ஒப்பந்த அடிப்படையில் வழங்க வைத்தியசாலை தீர்மானித்ததை அடுத்து, இம்முறை தனியார் நிறுவனங்களிடம் ஒப்பந்தத்துக்கான கேள்விப் பத்திரம் கோரப்பட்டுள்ளது. மின்சாரசபையின் பணி ஒப்பந்தம் நேற்றுடன் முடிவடைந்துவிட்டதால் அவர்கள் தமது பணியை நேற்றுடன் நிறுத்தியுள்ளனர். தற்போது வைத்தியசாலை சிற்றூழியர் தரத்தில் உள்ள பணியாளர்களே இப்பணியில் தற்காலிகமாக ஈடுபட்டுவருகினறனர். (3-117)



கொடிகாமத்தில் நேற்று இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பலியான இளைஞனின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டபோது... (படம்: பகீரதன்)

# ஊடகவியலாளர் நடேசனின் நினைவுதினம் அனுஷ்டிப்பு

கரவெட்டி,ஜுன்1

மறைந்த ஊடகவியலாளரும், நாட்டுப்பற்றாளருமான ஐயாத்துரை நடேசனின் ஓராண்டு நினைவுதின நிகழ்வு நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வை வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன், யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிருஷ்ணா ஆகியோர் மங்கள விழக்கேற்றி ஆரம்பித்துவைத்தனர்.

அமரர் ஐ.நடேசனின உருவப்படத்திற்கு ஊடகவியலாளர்களும் பொதுமக்களும் மலர் அஞ்சலிசெலுத்தினர்.

அதைத் தொடர்ந்து யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கச் செயலாளர் க.சூரியகுமார், கிருஷ்ணா, கவிஞர் சேரன் சிவராசா, வடமராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் துரைசத்தியநாதன், சுதந்திர ஊடகவியலாளர் ச.பா.நிர்மானுசன் ஆகியோர் உரையாற்றினர். (த-70)

# புலனாய்வுப் பிரிவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது கார் மெதுவாக நகர்ந்தபோது, அதனைத் தொடர்ந்து வந்த மோட்டார் சைக்கிளில் இருந்த இருவர், வாகனம் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று விசாரணைகளில் தெரியவந்ததாகப் பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

"துப்பாக்கிப் பிரயோகம் செய்த இருவரும் 'ஹெல்மெட்' அணிந்திருந்தனர். தம்மை அடையாளம் தெரியாதவகையில் மறைததிருந்தனர்" என்று சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

முத்தலிவ்வின் நெஞ்சையும் தலையையும் துப்பாக்கிச் சன்னங்கள் சல்லடையாகத் துளைததுள்ளன. அவரது உடலில் எட்டுக்கும் மேற்பட்ட சூட்டுக்காயங்கள் காணப்பட்டன என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

படுகாயமடைந்த மேஜர் உடனடியாக அருகிலிருந்த பிரபல அப்பலோ மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனின்றி அவரது உயிர் பிரிந்தது.

நாரஹேன்பிட்டியில் உள்ள கொத்தலாவல இராணுவப் படைத்தளத்துக்குச் சென்றுகொண்டிருக்கையிலேயே அவர் சுடப்பட்டார்.

### மேஜர் முத்தலிவ்

39 வயதான மேஜர் துவான் நிசாம் முத்தலிவ திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அவருக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் தீவிரமாகச் செயலாற்றியவர். புலிகளின் பகுதிகளுக்குள் ஆழ ஊடுருவிச் சென்று தாக்குதல் நடத்தும் அணி ஒன்றை உருவாக்குவதில் முதன்மையான பங்கு வகித்தவர். வவுனியாவில் செயற்பட்டுவரும் இராணுவப் புலனாய்வுப் பிரிவில் இவர் இந்த அணியை உருவாக்கினார்.

கண்டி, அத்துருகிரிய, மிலேனியம் சிற்றியில் அகப்பட்ட இராணுவத்தினரின் இரகசிய முகாமை நடத்தி வந்தவரும் இவரே எனக் கூறப படுகின்றது.

வெள்ளவத்தையில் புலிகளால் பதுக்கி வைக்கப்பட்ட [illegible] தங்களை 1997ஆம் ஆண்டு கைப்பற்றிய செயற்பாட்டிலும் - கட்டுநாயக்க விமான நிலையம் மீதான தாக்குதலின் பின்னர் அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக்கூறப்படும் பலரையும் அவர்களுக்கு உடந்தையாக இருந்தவர்கள் எனக கூறப்படும் பலரையும் கைதுசெய்தலிலும் - இவர் முக்கிய பங்காற்றியிருக்கின்றார்.

இராணுவத்தில் மிக நீண்டகாலம் பணியாற்றியுள்ளார்.

### புலிகள் மீது குற்றச்சாட்டு

மேஜர் முத்தலிவ் விடுதலைப் புலிகளாலேயே சுட்டுக்கொல்லப்பட்டார் என்று இராணுவத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர். "செவ்வாய்க்கிழமை காலை மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்த இரண்டு விடுதலைப் புலிகள் மேஜர் முதலிவை சுட்டுக்கொன்றனர்" - என்று இராணுவத் தலைமையகம் விடுத்த செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

இந்தக் கொலை தொடர்பாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு கவனஞ்செலுத்திவருகின்றது என்று அதன் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ அலுவலாக தற்போது நோர்வேயில் தங்கியிருக்கும் அவர் அங்கிருந்தபடி நேற்று உதயனுக்குக் கருத்துத்தெரிவித்தார்.

"இந்தக் கொலைச் சம்பவம் குறித்து எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. இது பற்றி நோர்வே அமைதி முயற்சியாளர்களுக்கும் நான் எடுத்துக் கூறியிருக்கின்றேன். இந்த விடயம் தொடர்பில் கண்காணிப்புக்குழு முழுக்கவனஞ்செலுத்தியுள்ளது. ஆனாலும், இந்தச் சம்பவம் தொடர்பில் எம்மால் எந்த உறுதியான நடவடிக்கையினையும் எடுக்கமுடியாது" - என்று ஹொக்லணட தெரிவித்தார். (க-3)






# கருணாவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னியாவில் இடம்பெற்ற இலக்கத்தகடற்ற வெள்ளைவான் கடத்தல்கள் பலவற்றின் பின்னணியில் முத்தலிவ் செயற்பட்டார் என்றும் கூறப்படுகின்றது.

சில மாதங்களுக்கு முன்னர் பம்பலப்பிட்டியில் சுட்டுக்கொல்லப்பட்ட புளொட் மோகனின் நெருங்கிய சகாவாகவும் செயற்பட்டு வந்தவர் முத்தலிவ்.

இறுதியாக, ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் கொலைக்குப் பாதை வகுத்துக்கொடுத்தவரும் இவரே என்று சந்தேகிக்கப்படுகின்றது.

தமிழர் பிரதேசத்தில் நடந்த தாக்குதல்கள் பலவற்றின் மூலம் பல அப்பாவி மக்கள் பலியாகக் காரணமாக இருந்தவர். 1991 - 1992 ஆம் ஆண்டுக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கும் வன்னிப்பெரு நிலப்பரப்புக்கும் இடையிலான கிளாலி - கொம்படிப் பாதையில் புலிகளின் முக்கிய தளபதி ஒருவருக்கு இவரால் இலக்குவைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் அப்பாவிப் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர்.

இராணுவத்தினரின் ஆழ ஊடுருவித் தாக்கும் அணியின் இரண்டாவது நிலை அதிகாரியாகச் செயற்பட்டவர். இறுதிக் காலத்தில் நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்குமான இரகசியப் புலனாய்வுப் பிரிவு அதிகாரியாகச் செயற்பட்டார்.

புலிகளின் புலனாய்வுத்துறை உறுப்பினர் நியூட்டன் காணாமற்போனமைக்கு மிக முக்கிய காரணகர்த்தாவாக இருந்தவர் இவர் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. அதன் எதிரொலியாகவே அவர் கொல்லப்பட்டிருக்கலாம் எனப் பொலஸார் தெரிவிக்கின்றனர்.

- இப்படி அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது. (க-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸின் புதிய பிரதமர் பெயரை அந்த நாட்டு ஜனாதிபதி அறிவித்தார்

லண்டன்,ஜூன்1

பிரான்ஸ் அரசின் அடிப்படைக் கொள்கை மாற்றங்களையும், புதிய பிரதமருடைய பெயரையும் அந்நாட்டு ஜனாதிபதி ஜக்ஷிராக் நேற்று அறிவித்தார் என அந்நாட்டுச் செய்திகள் தெரிவித்தன.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான புதிய அரசமைப்பை அமைப்பதற்கான பிரான்ஸ் மக்களின் ஆதரவைப் பெறும் நோக்கில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வாக்கெடுப்பு தோல்வியடைந்ததைத் தொடர்ந்தே அவர் மேற்படி அறிவிப்பை வெளியிட்டார்.

பிரான்ஸ் மக்கள் இந்த அரசமைப்பை நிராகரித்ததை ஐரோப்பியத் தலைவர்கள் பெரிய விடயமாகக் கருதவில்லை.

அதேசமயம், நேற்று நெதர்லாந்தில் நடைபெற்ற வாக்களிப்பிலும் இந்த அரசமைப்புக்கு எதிராகவே மக்கள் வாக்களிப்பர் என்று நம்பப்பட்டது.

மக்களின் இந்தத் தீர்ப்புக் காரணமாக உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டதாகிவிடக்கூடாது என ஐரோப்பிய வெளிவிவகாரப் பிரிவுக்கான தலைவர் தெரிவித்தார்.

மேலும், உள்நாட்டில் ஏற்பட்ட அதிருப்தியும் ஐரோப்பிய திட்டம் பற்றி அவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஏக்கமும்தான் பிரான்ஸ் நாட்டவர் இந்த அரசமைப்புக்கு எதிராக வாக்களிக்கப் பிரதான காரணம் என்றும் -

பிரதமருக்கான வேட்பாளர்களுடன் ஜனாதிபதி ஜக்ஷிராக் பிரதமர்களுக்கான வேட்பாளர்களுடன் ஏற்கனவே பேச்சு நடத்தியுள்ளார்.

ஐரோப்பிய அதிகாரிகள் பிரான்ஸில் ஏற்பட்டுள்ள இந்தத் தோல்வியால் குழப்பம் அடைந்திருந்த போதிலும், இந்த அரசமைப்பை ஏற்கனவே 9 நாடுகள் அங்கீகரித்துவிட்டன என்று தெரிவித்துள்ளனர் - என்று அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, நாங்கள்முன்னர் செயலாற்றியதுபோல் தொடர்ந்தும் செயலாற்றுவோம். அதன்மூலம் எமக்கு எதுவிதமான உளவியல் தாக்கமும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்வோம் என்று ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகாரத் தலைவர் ஜூலியா சொலான தெரிவித்துள்ளார்.

மேலும், பிரான்ஸ இந்த அரசமைப்பை 'வீட்டோ' செய்துவிடவில்லை ஏனைய அங்கத்துவ நாடுகள் அதனை முன்னெடுத்துச் செல்லும் என ஐரோப்பிய ஒன்றிய வர்த்தக ஆணையாளர் பீற்றர் மண்டல்ஸ் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸில் ஏற்பட்டுள்ள தேர்தல் முடிவுகள் தனது நாட்டு மக்கள்மீது செல்வாக்குச் செலுத்தக்கூடாது. இந்த வாக்களிப்பு அவர்களின் சொந்தத் தெரிவாகவே இருக்கவேண்டும் என நெதர்லாந்து ஜனாதிபதி தெரிவித்தார்.

நெதர்லாந்து மக்கள் இந்த அரசமைப்பை நிராகரிப்பார்களேயானால், ஐரோப்பாவின் ஏனைய பகுதிகளிலும் அந்த முடிவு செல்வாக்குச் செலுத்தும் என செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு ஐரோப்பிய அரசுகளுக்கிடையில் நடைபெற்ற நீண்ட பேச்சின் பின்னரே இந்த அரசமைப்புப் பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டது.

புதிய அங்கத்துவ நாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்துகொண்டபின்னர் ஒன்றியத்தின் அமைப்புகளை ஒருமுகப்படுத்துவதற்காக இந்த அரசமைப்பு தயாரிக்கப்பட்டது.

அங்கத்துவ நாடுகள் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் அல்லது நாடாளுமன்ற வாக்கெடுப்பின் மூலம் அரசமைப்புக்கான அங்கீகாரத்தை வழங்கமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# பிக்பென் கடிகாரம் பழுதாகியது

லண்டன்,ஜூன்1

லண்டனில் வெஸ்ட் மினிஸ்டர் அரண்மனையில் 147 ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருக்கும் பிக்பென் கடிகாரத்தின் இயக்கம் கடந்த சனிக்கிழமை நின்றுவிட்டது என அந்நாட்டு செய்திகள் தெரிவித்தன.

உள்ளூர் நேரப்படி 10.20 மணியளவில் தனது இயக்கத்தை நிறுத்திய பிக்பென் கடிகாரம் சுமார் 90 நிமிடங்கள் இயங்காதிருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

லண்டனில் வெப்பநிலை தற்போது 90 டிகிரியாக காணப்படுகிறது. 1953 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஏற்பட்டுள்ள இந்தக் கடும் வெப்பம் காரணமாகவே இந்தக் கடிகாரம் இயங்காமல் நின்றது என அதிகாரிகள் தெரிவித்தனர். பழுதுபார்க்கப்பட்ட பின்னர் மீண்டும் இயங்கியது.

2 ஆம் உலக யுத்தத்தின்போது பல தாக்குதல்களைச் சந்தித்தபோதிலும் தொடர்ந்து இயங்கிய பிக்பென் கடிகாரம் இதுவரை 3 தடவைகள் பழுதாகியுள்ளது.

1962 ஆம் ஆண்டு கடும் பனி காரணமாக 10 நிமிடம் தாமதமாக ஓடியது என்றும் -

1976 ஆம் ஆண்டு மீண்டுமொருமுறை பழுதாகி இயங்காமல் நின்றது என்றும் -

1997 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் திகதி பொதுத்தேர்தலுக்கு 24 மணிநேரத்திற்கு முன்னர் பழுதாகியது என்றும் - செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

சுமார் 315 அடி உயர கோபுரத்திலுள்ள இந்த பிக்பென் கடிகாரம் 1858 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இதன் நேரம் உலகிலேயே அதிக நம்பகத்தன்மையைக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# காஷ்மீரில் பனிச்சரிவு 10 பேர் புதைந்தனர்

ஸ்ரீநகர்,ஜூன்1

இந்திய காஷ்மீர் மாநிலத்தில் பனிச்சரிவு ஏற்பட்டு 10 பேர் புதைந்து உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஸ்ரீநகரில் இருந்து 80 கிலோமீற்றர் தூரத்தில் கப்ரன் என்ற கிராமத்தில் நேற்றுமுன்தினம் இந்தப் பனிச்சரிவு ஏற்பட்டது. ஏராளமான கால்நடைகளும் பனிச்சரிவில் அடித்துச் செல்லப்பட்டன.

இச்சம்பவம் பற்றிய தகவல் கிடைத்தவுடன் பொலீஸார் அவ்விடத்திற்கு விரைந்தனர். ஆனால், ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் வாகனங்கள் செல்லமுடியாது போய்விட்டது என்றும் -

பொலீஸார் சுமார் 4 மணிநேரம் பனிக்குவியலின் மீது கஷ்டப்பட்டு நடந்து அக்கிராமத்தை அடைந்து மீட்புப் பணிகளை ஆரம்பித்தனர் என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

காஷ்மீர் மாநிலத்தின் மலைப்பகுதிகளில் நேற்றுமுன்தினம் பனிப்பொழிவு கடுமையாக இருந்தது. இதனால், ஆங்காங்கே பனிச்சரிவுகள் ஏற்பட்டன. (க-8)

# இஸ்ரேல் - பலஸ்தீன தலைவர்கள் விரைவில் சந்தித்துப் பேச்சு

லண்டன்,ஜூன்1

பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸும் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோனும் விரைவில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர் என இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் ஷில்வின் ஷெல்வோக் தெரிவித்துள்ளார். எதிர்வரும் சில வாரங்களுக்குள் இந்தச் சந்திப்பு நிகழவுள்ளது. பெரும்பாலும் இந்தச் சந்திப்பு ஜெருசலமில் இடம்பெறலாம் என நம்பப்படுகிறது.

காஸா பகுதியிலிருந்து இஸ்ரேல் வெளியேறுவது தொடர்பான உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்கு இருதரப்பும் இணங்கிவருவதாக இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க)

# அகில இந்தியக் காங்கிரஸின் பொதுச் செயலாளராக ராகுல் காந்தி

புதுடில்லி,ஜூன்1

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச செயலாளராக ராகுலகாந்தி நியமிக்கப்பட்டுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் தலைவராக 3ஆவது முறையாகவும் சோனியா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அக்கட்சியின் மாற்றங்களைக் கொண்டுவரும் நோக்கிலேயே ராகுல் காந்தி பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ராகுல்காந்தி உட்பட இளம் தலைமுறையினருக்கு காங்கிரஸில் முக்கிய பொறுப்புகளை வழங்குவதும், காங்கிரஸ் காரிய சபை உறுப்பினர்கள் நியமனம் செய்யாமல் தேர்தல் மூலம் தேர்ந்தெடுப்பதும் சோனியாவின் அடுத்த திட்டமாகும்.

ராகுல்காந்திக்கு காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி வழங்குவதற்காக அகில இந்திய காங்கிரஸ் சபையின் நிர்வாகிகள் குழு மாற்றி அமைக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சோனியா காந்தி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு ஒப்புதல் வழங்க அகில இந்திய காங்கிரஸ் சபை கூட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி டில்லியிலோ அல்லது அருகிலுள்ள மாநிலத்தின் தலைநகரிலோ நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்தில் காரிய சபைக்கான தேர்தல் நடைபெறும் ராகுல்காந்தி பொதுச் செயலாளராக நியமிக்கப்படுவார். நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத் தொடர் ஜூலை மத்தியில் தொடங்கும் அதற்கு முன்னதாக காரிய சபைத் தேர்தல், காங்கிரஸ் சபை நிர்வாகிகள் மாற்றத்தை நடத்தி முடித்துவிட ஏற்பாடு நடந்து வருகிறது என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காரிய சபைத் தேர்தல் நடத்தப்பட்டு 10 ஆண்டுகள் ஆவதால், இந்த முறை தேர்தல் நடக்கும்போது முக்கிய தலைவர்கள் இடையே கடும்போட்டி நிலவும் என்று கருதப்படுகிறது.

காங்கிரஸ் கட்சியில் அதிகாரம் படைத்தது காரிய சபை ஆகும். இதில் உறுப்பினராவதற்கு எல்லாத் தலைவர்களுமே ஆசைப்படுவார்கள்.

காரிய கட்சி தலைவரையும் சேர்த்து 25 மொத்த உறுப்பினர்கள் அடங்குவர். இதில் 12 இடங்கள் நியமனம் மூலம் நிரப்பப்படும். 12 பேர் தேர்தல் மூலம் தேர்ந்து எடுக்கப்படுவார்கள்.

1998 ஆம் ஆண்டில் சோனியா தலைவராக பிறகு 24 இடங்களுமே நியமனம் மூலம நிரப்பப்பட்டு வந்தன. இந்த முறைதான் தேர்தலுக்கு திட்டமிடப்பட்டு இருக்கிறது - என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

உலக அரங்கில்

# கனடாவின் கிளேபோவா பிரபஞ்ச அழகியாகத் தெரிவு



தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பிரபஞ்ச அழகி (மிஸ் யுனிவர்ஸ்- 2005) போட்டியில் கனடாவைச் சேர்ந்த நாடாலி கிளேபோவா 'மிஸ் யுனிவர்ஸ்' 2005ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

23 வயதான கிளேபோவா மொடல் மட்டும் அல்ல; சிறந்த பேச்சாளர். கனடாவில் ரொறன்ரோ நகரைச் சேர்ந்தவர். ரஷ்யாவில் பிறந்தவர் என்றாலும் கடந்த 11 ஆண்டுகளுக்கு முன்னர் கனடாவில் இவரது குடும்பம் குடியேறியது.

இறுதிப்போட்டிக்கு கனடாவின் நாடாலி கிளேபோவா தவிர மெக்ஸிகோ, புர்டோ ரிகோ, டொமினிகன் குடியரசு, வெனிசுலா நாட்டின் அழகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர்.

இவர்களிடம் 12 பேர் கொண்ட நீதிபதிகள் குழு பல்வேறு கேள்விகளை எழுப்பினர். அவற்றில் சிறப்பாகப் பதிலளித்த நாடாலி மிஸ் யுனிவர்ஸாக அறிவிக்கப்பட்டார்.

புர்டோ ரிகோ நாட்டு அழகியான சிந்தியா ஒலாவாரியாவுக்கு 2ஆவது இடம் கிடைத்தது. (8)

# பாக். பள்ளிவாசலில் குண்டுவெடிப்பு

கராச்சி,ஜூன்1

பாகிஸ்தான் கராச்சி நகரில் முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றுக்குள் தற்கொலை குண்டுதாரிகள் குண்டொன்றை வெடிக்கச் செய்ததில் 4 பேர் உயிரிழந்தனர். அதிகளவானோர் காயமடைந்தனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

கராச்சி நகரின் கிழக்கில் அமைந்துள்ள பள்ளிவாசலில் நேற்றுமுன்தினம் மாலை இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

தொழுகை நடந்து கொண்டிருந்தவேளை 3 குண்டுதாரிகள் காவலுக்கு இருந்த இரு பொலீஸாரைச் சுட்டுக்கொன்றுவிட்டு பள்ளிவாசலுக்குள் நுழைய முயன்றனர். அப்போது மற்றொரு பொலீஸ் சிப்பாய் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்றும் -

அந்தத் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி இரு குண்டுதாரிகள் அவ்விடத்திலேயே உயிரிழந்தனர். ஆனால், மற்றொருவர் பள்ளிவாசலுக்குள் நுழைந்து குண்டை வெடிக்கச் செய்தார் என்றும பொலீஸார் தெரிவித்தனார்.

இந்தக் குண்டுவெடிப்பைத் தொடர்ந்து கராச்சி நகரில் பெரும் பதற்றம் நிலவியது.

இந்தத் தற்கொலைக் குண்டுத்தாக்குதலை நடத்தியவர்கள் குறித்த மேலதிக விசாரணையில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க)

# இந்தியா–பாகிஸ்தான் தீவிரவாதத்தை முறியடிக்க கவனம் செலுத்தவேண்டும்

## பா.ஜ.க. தலைவர் கருத்து

புதுடில்லி,ஜூன்1

பாகிஸ்தானுக்கு நேற்றுமுன்தினம் விஜயஞ் செய்த பா.ஜ.க. தலைவர் அத்வானிக்கு அந்நாட்டு விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது. இரண்டுநாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றுள்ள அத்வானி அந்நாட்டு ஜனாதிபதி பர்வேஷ் முஷரப், பிரதமர் சவுகத் அசீஸ் ஆகியோரை நேற்றுச் சந்தித்துப் பேசினார்.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் தீவிரவாதத்தை முறியடிப்பதில் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று பா.ஜ.க. தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான எல்.கே. அத்வானி வலியுறுத்தினார்.

நேற்று முன்தினம் பாகிஸ்தானுக்குப் புறப்படும் முன் புதுடில்லியில் கட்சித் தொண்டர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இந்தியா, பாகிஸ்தான் இடையே நட்புறவு மேலும் வலுப்படவேண்டும். இரு நாடுகளுக்கும் இடையே அமைதி முயற்சிகளை மேற்கொண்டது. வாஜ்பாய் தலைமையிலான முன்னைய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுதான். அதனை மன்மோகன் அரசு தொடந்து செயற்படுத்துவது மகிழ்ச்சியளிக்கிறது.

கார்கில் போர் நடந்தபோதிலும் பாகிஸ்தானுடன் உறவைப் புதுப்பித்துக்கொள்ள முன்னாள பிரதமர் வாஜ்பாய் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டார். பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷரப், ஆக்ரா மாநாட்டுக்கு அழைக்கப்பட்டார். ஆனால், அந்தப் பேச்சு தோல்வியில் முடிந்தது.

2004ஆம் ஆண்டு ஜனவரியில் இரு தலைவர்களும் இஸ்லாமாபாத்தில் வெளியிட்ட கூட்டறிக்கையில், தங்களது மண்ணில் பயங்கரவாதச் செயல்களை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்று பாகிஸ்தான் தெரிவித்தது.

இது இந்தியா, பாகிஸ்தான் உறவில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது.

இந்தியா, பாகிஸ்தான் இடையே மேலும் உறவு வலுப்படவேண்டும் என்பதே எனது விருப்பம். தீவிரவாதம் தான் இரு நாடுகளுக்கும் பெரிய அச்சுறுத்தலாக இருந்துவருகிறது. அதை வேருடன் களைய இரு நாடுகளும் முன்வரவேண்டும்.

கடந்த 27 ஆண்டுகளில் பாகிஸ்தானுக்கு நான் மேற்கொள்ளும் 2ஆவது பயணம் இதுவாகும். என்னுடன் குடும்பத்தினரும் வருகின்றினர். கராச்சியில் நான் பிறந்தேன். அங்கு நான் படித்த பாடசாலைக்குச் செல்லவுள்ளேன் - என்று கூறினார். (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

JE தொடர் இலக்கமுடைய Pulsar DTS 180 கருஞ்சிவப்பு நிறமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 0777570288. (45976)

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு அருகில் பாடசாலை வீதியில் 4 பரப்பு குழி 14 காணியில் கிணற்றுடன் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு இ.குழந்தைவேலு, அதிபர். க.சுகுந்தன், T.P. 077 6258796 (பிற்பகல் 3.00 மணிக்குப் பின்பு தொடர்பு கொள்க) (36025)

## காணி விற்பனைக்கு

புலோலி தெற்கில் உள்ள சிலுந்தில் பெரிய தம்பிரான் ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள 33 பரப்பு நெற்காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு க.சி.சிவசுப்பிரமணியம், இல.51, முதலாவது ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (சி/43020)

## திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யா திருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர்கள், வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம் விரும்பி ஏற்கும் ஆண்கள், எங்களிடம் வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. புகைப்படம், ஜாதகத்துடன் நேரிலோ, தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருமணமாலை, இல.289, A, பட்டாணிச்சூர், மன்னார் றோட், வவுனியா. T.P.:024 4588410, 0776 630207. (45057)

## தவறிவிட்டது

வடலித்தோட்டம் கரணவாய் மத்தி கரவெட்டி என முகவரியிடப்பட்ட இராசரத்தினம் அன்னமயில் என்பவரின் தேசிய அடையாள அட்டை (455510031V) தங்கநகை, வங்கி அடைவுப் பற்றுச்சீட்டு என்பன 27.05.2005 வெள்ளிக்கிழமை செல்வச்சந்நிதி ஆலயத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (36009)

கோப்பாய்க்கும் ஆவரங்காலுக்கும் இடையில் HX 6118 இலக்கமுடைய பின் இலக் கத்தகடு 17.05.2005 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் த.கணேஸ்வரன், புகையிரத நிலையம் அருகில் மீசாலை கிழக்கு, மீசாலை, என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (36029)

சர்வோதயா வீதி, ஆவரங்கால் புத்தூரைச் சேர்ந்த சுதாகரன் யோகேஸ்வரி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 705914230V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (36007)

எழுதுமட்டுவாளைச் சேர்ந்த யாக்கோப் சிசிலியம்மா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.466240354V), விசேட அடையாள அட்டை, செபமாலை அடங்கிய சிறிய பேர்ஸ் 25.05.2005 அன்று முதலாம் கட்டைக்கும் நெல்லியடிக்கும் இடையில் (750) மினிபஸ் பயணத்தின் போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மா. யாக்கோப், முதலாம் கட்டை, பருத்தித்துறையில் அல்லது பருத்தித்துறை சிற்றூர்த்திக் காரியாலயத்தில் ஒப்படைத்துதவவும். (36019)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் செம்பியன் லேனில் இருந்து நந்தாவில் செல்லும் வீதியில் (கே. கே. எஸ். வீதியிலிருந்து சுமார் 200 யார் தூரத்தில்) நல்ல சுற்றாடலில் நான்கு (4) பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
அ.முத்துலிங்கம்
தொ.பே. 222-3837

(32-21-11-15) (சி/43132)

## மாடிவீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நந்தாவில், கொக்குவிலில் (செம்பியன் வீதியில்) ஒன்றரைப் பரப்புக காணியில் நான்கு படுக்கை அறைகள் கொண்ட நவீன மாடிவீடு உடன் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு:
அ.முத்துலிங்கம்
யாழ்ப்பாணம் - T.P. 021 222 3837,
லண்டன் - 0044 2085532202,
0044 7962059886

(சி/43133) (21-11-15-32)

## வீடு விற்பனைக்கு

நாமகள் பாடசாலை பின்புறம் புகையிரத நிலைய வீதியில் 2 பரப்புக் காணியுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: K.றூபன்
கஸ்தூரி களஞ்சியம்,
திருநெல்வேலி.

(36010) (21-15-11)

## வீடுவளவு விற்பனைக்கு

கொக்குவில் ஸ்ரேசனுக்கு எதிர்ப்புறம் உள்ள ஒழுங்கையில் நாலு பரப்புடன் கூடிய வீடு வளவு சகல வசதிகளும் கொண்டது விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
இல.356, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 5648.

(45950) (21-11-15)

## கோழித்தீன் விற்பனைக்கு

ஒரிஜினல் பிறீமா கோழித்தீன் C.I.C. கோழித்தீன், கோழி மருந்துகள், புறொயிலர் குஞ்சுகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: New R.S.K Farm மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். New R.S.K Farm பெரிய மதவடி, மானிப்பாய் வீதி, உடுவில். (36001)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி, உடன் சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (45829)

## கோழிக்குஞ்சு விநியோகம்

நம்பர் - 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள், 01.06.2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி., றஞ்சித் 517, ஸ்ரான்லி றோட்., மதுரா 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்., தாரகை, முதலாம் கட்டை, பருத்தித்துறை., ராதா, மாவடி, வட்டுக்கோட்டை., P.ரவி, சாவகச்சேரி, கௌரி ஸ்ரோர், பண்டத்தரிப்பு. T.P.: 222 2867. (45994)

இரண்டு முறை தடுப்பு மருந்து ஏற்றப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், 06.06.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளான சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சந்நிதி பாம், தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர் என்பவற்றிலும் கிடைக்கும். (45830)

# பொதுக்கட்டமைப்புக் குறித்து நாடாளுமன்றிற்கு பதிலளிக்க அமைச்சர் நியமிக்கப்படுவார்

உத்தேசப் பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட பின்னர் அது தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்கு நாடாளுமன்றத்தில் பதிலளிக்க சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை நியமிக்க அரசு தீர்மானித்திருக்கிறது.

அரச சமாதானச் செயலகம் இதனை தெரிவித்தது.

இதற்கு விடுதலைப் புலிகளும் தங்களின் சம்மதத்தை வழங்கியிருக்கின்றனர் என செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அத்துடன் பொதுக்கட்டமைப்பை கண்காணிக்கும் பொறுப்பையும் அந்த அமைச்சரிடம் கையளிக்க அரசு தீர்மானித்துள்ளதாக கூறப்படுகின்றது. பொதுக் கட்டமைப்புக் குறித்து வாய்மூலப் பதிலை எதிர்பார்த்து நாடாளுமன்ற உறுப்பினர்களால் எழுப்பப்படும் அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளிக்கும் பொறுப்பு அந்த சிரேஷ்ட அமைச்சருக்கு வழங்கப்படும்.

பொதுக்கட்டமைப்புக் குறித்து அரசியல் கட்சிகள் முன்வைக்கும் மாற்று யோசனைகளை விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்தவிருக்கும் உடன்படிக்கையில் சேர்த்துக்கொள்ள கால அவகாசம் இன்மையாலும், ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் மாறிமாறி சமர்ப்பிக்கும் யோசனைகளுக்கு அமைய பொதுக்கட்டமைப்பு தொடர்பான ஆவணங்களில் அடிக்கடி மாற்றங்களை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் இணங்காமையினாலும் அரசாங்கம் இந்த முடிவை எடுத்திருப்பதாகத் தெரியவருகிறது.


உ
சாயிராம்

## பணியாளர்கள் தேவை

1) பாதுகாவலர் (Security)
2) சிட்டை எழுதுநர் (Clerk)
3) பரிமாறுபவர் (Waiter)
4) பூந்தோட்ட வேலையாளர்
5) சமையல் உதவியாளர்
6) பயணிகள் விடுதிப் பராமரிப்பாளர் (Room boy)

ஆகியோர் கீழே உள்ள முகவரியில் 02-06-2005 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு சமுகம் தரவும்.
(அனுபவம் உள்ளோர் விரும்பத்தக்கது).

தொ.இல. 222 2810
0773031680

மில்லேனியம் றெஷ்ரோரன்ற்
பல்கலைக்கழக வீதி, கலட்டி
76/60, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்

(36030)(21-11-15)


## வீடு வாடகைக்கு

கொக்குவில் கிழக்கு, இல. 21/2 கோணாவளை வீதியில் (மருத்துவ பீடத்திற்கு அருகில்) நவீன முறையில் சகல வசதிகளுடனும் அமைக்கப்பட்ட 6 அறைகளுள்ள பெரிய வீடு அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு or அலுவலகங்களுக்கு வாடகைக்கு விடப்படும். தொலைபேசி வசதியும் உண்டு.

தொடர்பு: 021 222 5878

(21-11-34) (35044)

## தேவை

கடைச்சல் இயந்திர இயக்குநர் (லேத்மன் - Latheman) தேவை. குறைந்தது 5 வருட அனுபவமுள்ளவரும் சுயமாகச் சிந்தித்துச் செயற்படக் கூடியவரும் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: திட்ட முகாமையாளர்,
புறோமோட்டோர்ஸ் என்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட்
844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P. 021 222 5780.

(21-11-34) (சி/43137)

## முதலாம் ஆண்டு இதய அஞ்சலி

உதய ஒளி
04 - 02 - 1958



இறை ஒளி
12 - 06 - 2004

அமரர் பொன்னா தேவராசா

பாசத்தை எம்முடன் பகிர்ந்து எம்மைப்
பரிதவிக்க விட்டுச் சென்று
ஓராண்டு கடந்து போனதே!
நீங்கள் மறைந்தும் மறையாத உங்கள்
நினைவுகள் எங்கள் விழியின் ஓரத்தில்
வழியும் ஈரத்தில் சொருகிக் கொண்டனவோ!

50 A, பிறவுண் றோட்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவில்
மனைவி சாந்தி.

(36042) (21-32-11-15)

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்

உ

இந்தியாவிலிருந்து வந்துள்ள

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள்ரேகை, எண்கணிதம், கைரேகை மூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது

அறை எண் 01, ரி.கே.ரூறிஸ்ற் இன்,
இல.200, பலாலி றோட், கந்தர்மடம் சந்தி, (அரசடி வீதி)

(36064)(21-11-15)

## அறிவித்தல்

வடக்கு - கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கத்தினரால் 11. 05. 2005 அன்று பி. ப 3 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் சங்கத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் மர, உலோக தளபாடங்களை உற்பத்தி செய்வோரும் விநியோகிப்போரும் மர, உலோக உற்பத்தியாளர் பகுதியில் பதிவுகளினை மேற்கொள்ளவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. இத்

தொடர்பு:
வடக்கு - கிழக்குப் பிராந்திய நிர்மாணிகள் சங்கம்,
மர, உலோக உற்பத்தியாளர் பகுதி,
யாழ்.மாவட்ட செயலகம், ஜி.பி.எஸ். றோட்,
நிர்வாகம்

(36032)(21-11-15-32)

## கடை உடைத்து பொருள்கள் திருட்டு

மந்திகையில் அழகு சாதன வர்த்தக நிலைய பின் கதவு உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க் கிழமை நள்ளிரவு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலைக்கு முன்பாக உள்ள அழகுசாதன வர்த்தக நிலையம் ஒன்றிலே இத்திருட்டு இடம்பெற்றுள்ளது.

சம்பந்தப்பட்ட வர்த்தகர் மறுநாள் வர்த்தக நிலையத்தைத் திறப்பதற்காகச் சென்றபோது வர்த்தக நிலையத்தின் பின் கதவு உடைக்கப்பட்டுப் பொருள்கள் திருடப்பட்டமை தெரியவந்தது. இது தொடர்பாகப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டில் 84 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-70)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
28 06 1977



செல்வன் கணேசலிங்கம் நிரஞ்சன் (சிறி)
(சமூகநல சேவை நிலையம்)

அன்னை மடியில்
20 03 1973



செல்வி கணேசலிங்கம் துஷ்யந்தி (துஷி)
(பேராதனைப் பல்கலைக்கழகம், B.A. மாணவி)

அரக்கர் அழிப்பில்: 27-05-2000

திதி: 01-06-2005

எம் வரலாற்றுப் பாதையில் உதித்த செல்வங்களே
எம் உடன் பிறப்புகளே என் மைத்துனர்களே
ஐந்து ஆண்டுகள் இல்லை எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் உடலில் இருந்து உயிர் பிரியும் வரை மறக்கமாட்டோம்

[illegible]
சாவகச்சேரி

அப்பா, அம்மா, அண்ணா, தம்பி, தங்கை,
அண்ணி மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

(45996)(50-15-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# வரன்முறையற்ற தலையீடு

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் பங்களிப்பு பல தரப்பினாலும் - குறிப்பாக ஈழத்தமிழர் தரப்பால் - தொடர்ந்து சந்தேகக்கண்கொண்டே நோக்கப்பட்டு வருகிறது.

ஈழத்தமிழர்களைச் சுதந்திரப் போராட்டம் நடத்தத் தூண்டியது, இலங்கை அரசுப் படைகளுக்கு எதிராகச் சண்டையிடுவதற்காகத் தமிழ்ப் போராளிகளுக்கு ஆதரவு வழங்கி பயிற்சியளித்தது, ஈழத்தமிழ்ப் போராளிகளைப் பல குழுக்களாகப் பிரித்துவைத்து, அவர்கள் தமது இலட்சியத்தை அடையாமல் பார்த்துக்கொண்டது ஆகியவை முதல் அமைதிப்படை என்ற பெயரில் இலங்கைத் தீவுக்குள் அடியெடுத்து வைத்து, தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து, தமிழர் மீது கொடூரப் போரைத் தொடுத்துப் பெரும் உயிர், உடைமை அழிவுகளை ஏற்படுத்தியதுவரை இந்தியா பண்ணிய திருகுதாளம் உலகறிந்த உண்மை.

'சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது' என்பதுபோல பட்டறிந்து கையைச் சுட்டுக்கொண்ட பாரதம், சுமார் ஒரு தசாப்த காலம் இலங்கைப் பக்கமே அதிகம் சிரத்தை காட்டாமல் வாலைச் சுருட்டிக்கொண்டு மடங்கி இருந்தது. இப்போது தன் கைவரிசையை அது மீண்டும் காட்டத் தொடங்கி விட்டது என்ற கதை மெல்லக் கசிய ஆரம்பித்துள்ளது.

புலிகளின் அனைத்துலகத் தொடர்பகத்திலிருந்து வெளியான அறிக்கை ஒன்று இந்தியாவின் நரித்தன வேலைகளைப் புட்டுக்காட்டியுள்ளது.

இராணுவ ரீதியில் இலங்கைப் படைகளுக்கு இந்தியா உதவுவது குறித்து அதில் மேலோட்டமாகக் குறிப்பிடப்பட்டாலும், இலங்கை அமைதி முயற்சிகள் குறித்து அதில் கூறப்பட்ட கருத்துக்கள் தமிழருக்கு விசனமளிக்கும் உண்மைகளாகும்.

*"அமைதி முன்னெடுப்பிற்கு ஸ்ரீலங்கா விவகாரங்களில் இந்தியத் தலையீடு பெரும் முட்டுக்கட்டையாக இருப்பதென்பது அரசியல் வட்டாரங்களில் ஒரு திறந்த இரகசியமாக உள்ளது. கொழும்பு நகரில் இந்திய உளவுத்துறை நிறுவனமான 'றோ' அலுவலகம் திறந்துள்ளது. அது வெளிப்படையாக இயங்கிவருகின்றது. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா ஆகிய நகரங்களில் உள்ள ஈ.பி.டி.பி. கிளைகளில் 'றோ' அலுவலகம் அமைந்துள்ளது.*

*"ஸ்ரீலங்கா படையுடன் இந்தியக் கடற்படை மிகவும் நெருக்கமான உறவுகளைப் பேணுகின்றது. இந்தியா, சீனா ஆகிய நாடுகளால் இப்போது ஸ்ரீலங்காவின் பொருளாதாரம் கட்டுப்படுத்தப்படுகிறது.*

*"சுயமாக இயங்குவதற்கு ஸ்ரீலங்கா அரசை இந்தியா அனுமதிக்கமாட்டாது. ஏற்கனவே ஜே.வி.பியை இந்தியா தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளது."*

-இப்படி அந்த ஆய்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

ஏற்கனவே, சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய உளவு அமைப்பான 'றோ'வின் இரண்டாவது நிலைத் தலைவர் ஒருவர் கொழும்பிலிருந்து ஹெலியில் யாழ்ப்பாணம் சென்று, யாழ். பொது விளையாட்டு அரங்கில் இறங்கி, சில தரப்பினரைச் சந்தித்து கலந்தாலோசனை நடத்திவிட்டு, ஹெலியிலேறி நேரடியாகக் கட்டுநாயக்க விமானத்தளத்தில் வந்திறங்கி, அங்கிருந்து நேரே புதுடில்லி திரும்பியிருந்தார். இதுபற்றிய செய்தியும் அப்போது வெளியாகி இருந்தது.

அந்த 'றோ' அதிகாரி யாழ்ப்பாணத்தில் சந்தித்த பிரமுகர்களில் முக்கியமானவர் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியின் தூணாக விளங்கிய றொபேட் என அழைக்கப்படும் சுபத்திரன். இந்தச் சந்திப்பு நடந்து சில காலத்தில் மர்மத் தாக்குதலில் சுபத்திரன் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரைப் புலிகளே கொன்றனர் என்று புலி எதிர்ப்பு அணிகள் குற்றம் சுமத்தியதும் நினைவிருக்கலாம்.

சுபத்திரனின் மறைவையடுத்து தமது செயற்பாடுகளுக்கு வேறு வழிமுறையை - மூலத்தை - 'றோ' நாடியிருக்கின்றது போலும். அதைத்தான் இந்த ஆய்வறிக்கை கோடிட்டுக் காட்டுகின்றது.

இலங்கையில் அமைதி முன்னெடுப்புக்கு இந்தியா பெரும் முட்டுக்கட்டையாக இருக்கின்றது என்றும் -

இந்த விடயத்தில் இலங்கை அரசு சுயமாக இயங்குவதற்கு இந்தியா விடாது என்றும் -

இந்த ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயம் நூற்றுக்கு நூறு உண்மை என்பதை கொழும்பு அரசியல் விவகாரங்களை அவதானிப்போர் அப்படியே ஏற்றுக்கொள்வர்.

அரசும், புலிகளும் சேர்ந்து அமைக்க உத்தேசித்திருக்கும் பொதுக்கட்டமைப்பு அதிகாரம் ஏதும் அற்றது என்கிறார் இலங்கை ஜனாதிபதி. சமாதான முயற்சிகளோடு பொதுக்கட்டமைப்பு தொடர்புடையதும் அல்ல என்றும் கூறுகிறார் அவர். ஏற்கனவே வடக்கு - கிழக்கில் செயற்பட்டுவரும் ஒரு முறைமையையே பொதுக்கட்டமைப்பு என்ற ஏற்பாட்டில் தாம் ஒழுங்குபடுத்துகின்றார் என்றும், இந்தப் பொதுக்கட்டமைப்பை ஏற்பதன் மூலம் புலிகள் இலங்கை அரசின் இறைமையை ஏற்றுக்கொள்கின்றார்கள் என்றும் கூட இலங்கை ஜனாதிபதி கூறுகிறார்.

அதிகாரம் ஏதுமற்ற - அமைதி முயற்சிகளோடு தொடர்பற்ற - இலங்கை அரசின் இறைமையைப் புலிகளை ஏற்கவைக்கின்ற - இந்தப் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கும் அதற்கு முன்னர் இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்குப் போய், அந்த நாட்டு அரசிடம் சலாம் வைத்து, விளக்கி, அந்த நாட்டு அதிகார வர்க்கத்திடம் அனுமதி பெற்றுவரவேண்டியிருக்கிறது என்றால் இலங்கை விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பு - அதிகாரம் - செல்வாக்கு - மிதமிஞ்சிய தலையீடு - எவ்வளவுதூரம் உள்ளது என்பது தெளிவு.

மேற்படி ஆய்வறிக்கையில் கூறப்பட்ட கருத்தை உறுதிப்படுத்தும் செயற்பாடே நாளை புதுடில்லி புறப்படும் ஜனாதிபதியின் விஜயமும், அங்கு அவர் பங்குகொள்ளப் போகும் நிகழ்வுகளும் ஆகும்.

வெள்ளியன்று இந்தியப் பிரதமரை இலங்கை ஜனாதிபதி சந்தித்த பின்னர் வெளியாகும் உத்தியோகபூர்வ அறிக்கைகளில் சொல் ஜாலங்கள் நிச்சயம் இருக்கும். ஆனால், இலங்கை விடயத்தில் இந்தியாவின் அளவு மீறிய அதிகாரத்தொனி அதிலும் வெளிப்படுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இந்தியாவின் வரன்முறையற்ற அழுத்தத்துக்கு - பிரதேச வல்லாதிக்கப் போக்கின் தடிப்புக்கு - இலங்கை அரசுத் தலைமை அஞ்சி, விட்டுக்கொடுத்து, மசிந்துபோகுமானால் - துணிவோடு சுயாதீனமாகச் செயற்படத் தவறுமானால் - இலங்கையில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தும் தற்போதைய முயற்சிகள் தோற்றுப்போகும் என்பது நிச்சயம்.

பிரதேச வல்லாதிக்கத்தை மூர்க்கமாக எதிர்க்கும் துணிச்சலைத் தமிழர் தரப்பிடம் இருந்து தென்னிலங்கை படித்துக்கொண்டால் நல்லது.

---

அரசு – தனியார் – இராணுவம் என்ற பாகுபாடின்றி

# புகைகக்கும் அனைத்து வாகனங்களினதும் அனுமதிப்பத்திரங்கள் ரத்துச் செய்யப்படும்

யாழ்ப்பாணம்.ஜூன் 1

யாழ்.குடாநாட்டில் சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் வகையில் புகைகக்கியபடி செல்லும் இராணுவம் மற்றும் அரச வாகனங்களினது அனுமதிப்பத்திரங்களும் ரத்துச்செய்யப்படும்.

- இவ்வாறு யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் தெரிவித்தார்.

கடந்த 26ஆம் திகதி யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற மாவட்டச் சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் அமுலாக்கல் கூட்டத்தில், புகைகக்கும் வாகனங்களின் அனுமதிப்பத்திரம் ரத்துச்செய்வதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு மோட்டார் திணைக்களத்தினால் யாழ்.பொலீஸாருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆயினும், இந்தத் தீர்மானம் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமையால் திணைக்களத்தால் மீண்டும் ஒரு அறிவுறுத்தல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் யாழ்.குடாநாட்டில் போக்குவரத்தில் ஈடுபடும் சகல தரப்பினரதும் வாகனங்களிலும் புகைகக்கும் வாகனங்களின் அனுமதிப்பத்திரங்களை ரத்துச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மோட்டார் திணைக்கள ஆணையாளர் -

தனியார் மற்றும் அரச, இராணுவ வாகனங்கள் எனப் பாகுபாடின்றி புகைகக்கும் அனைத்து வாகனங்களினதும் அனுமதிப்பத்திரங்கள் ரத்துச்செய்யப்படும். புகைகக்கும் வாகனங்களை அடையாளம் காண்பவர்கள் அவ்வாகனங்கள் தொடர்பான விவரங்களை எமக்கு அறியத்தந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

இதேவேளை -

இவ்வாறான அறிவுறுத்தல் பத்திரிகையில் விடுக்கப்பட்ட பின்பும் புகைகக்கும் வாகனங்கள் - குறிப்பாக படையினரின் வாகனங்கள் - அதிகம் யாழ். குடாநாட்டில் போக்குவரத்தில் ஈடுபடுவதாகவும் - அவ்வாகனங்களைக் காணும் பொலீஸாரும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதாகவும் பொதுமக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(8-3-202)

---

ஆசிரியர் சேவை தரமுயர்வுக்கான

# வயதுக் கட்டுப்பாடு நீக்கப்பட்டதற்கு தமிழர் ஆசிரியர் சங்கம் வரவேற்பு

யாழ்ப்பாணம்.ஜூன் 1

இலங்கை ஆசிரியர் சேவையின் தரம் I இற்குச் செல்வதற்கு வயதுக் கட்டுப்பாட்டை நீக்கியதை தமிழர் ஆசிரியர் சங்கம் வரவேற்றுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணத்தில் சில திருத்தங்களுடன் ஆசிரியர் சேவை தொடர்பான சுற்றறிக்கை வெளியாகியுள்ளது.

தனிச்சிங்களத்தில் மட்டும் வெளியிடப்பட்டுள்ள இச்சுற்றறிக்கையில் ஆசிரியர் சேவை தரம் I இற்குச் செல்வதற்கு வயதுக் கட்டுப்பாட்டை நீக்கியுள்ளமை தொடர்பான திருத்தங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இத்திருத்தத்தை வரவேற்று இலங்கை ஆசிரியர் சங்கம் செய்திக் குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புதிய சுற்றறிக்கை ஊடாக நல்ல அம்சங்கள்; குறிப்பாக நாம் பல தடவைகள் கல்வியமைச்சுடன் நேரடியாக தொழிற்சங்கச் சந்திப்பில் ஈடுபட்ட சமயம் விடுத்த கோரிக்கைகள் அமுலுக்கு வந்திருக்கின்றன. இலங்கை ஆசிரியர் சேவை தரம் I இற்குச் செல்வதற்கு வயதுக் கட்டுப்பாட்டை நீக்கியமை எமது சங்கத்திற்குக் கிடைத்த பெரும் வெற்றி என்பதுடன் ஆசிரிய சமூகத்தின் ஒட்டுமொத்த ஒற்றுமைக்குக் கிடைத்த பிரதிபலன் என்று துணிந்து கூறலாம்.

நாம் பார்வையாளராக இருந்துவிட்டு இன்றைய பலாபலன்களில் உரிமை கொண்டாடவில்லை. மாறாக, வடக்கு - கிழக்கிலும் சரி நாடளாவிய ரீதியிலும்சரி பல தொழிற்சங்கப் போராட்டங்களை பல தொழிற்சங்கச் சந்திப்புகளை நடத்தி வந்துள்ளோம். இவற்றை ஆசிரிய சமூகம் நன்கறியும்.

தரம் I இற்கு செல்வதற்கு பரீட்சை அவசியமற்றது என்ற நிபந்தனை 2005 டிசெம்பர் வரை நீடிக்கப்படவேண்டும் என்றும் கேட்கிறோம்.

அத்துடன், சுயமாகப் பதவியுயர்வு பெறும் ஆசிரியர்களுக்கு அந்தத் திகதியிலிருந்து சம்பள நிலுவைகளும் வழங்கப்படவேண்டும் என்று கோருகின்றோம்.

01.01.2005 முதல் ஆசிரியர்களுக்கான சம்பளநிலுவை வழங்கப்படுமென்று புதிய சுற்றுநிருபம் கூறுகிறது. அத்துடன், 2005.01.01 இற்குப் பின் தரம் 1இற்குச் செல்ல 5 புள்ளிகளுடன் தகுதியுடையவர்கள் போட்டிப் பரீட்சைக்கு தோற்றவேண்டும் எனவும் கூறுகிறது. அந்நிபந்தனைகளை 2004 இல் கூறியிருக்க வேண்டும். மாறாக, 2005 நடுப்பகுதியில் சுற்றுநிருபத்தை வெளியிட்டு விட்டு நிபந்தனைகளை விதிப்பது ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, மேற்படி நிபந்தனைகளை 2006இற்கு ஏற்புடையதாக மாற்றவேண்டும் - என்றுள்ளது.

(8-84-202)

---

# குடாநாட்டில் பாதீனியத்தை அழிக்க தேசிய எழுச்சிப் பேரவை செயலாற்றும்

வலி.வடக்கு, ஜூன்1

யாழ். குடாநாட்டில் பரவிவரும் பாதீனியச் செடியை அழிப்பதற்கு வேண்டிய செயற்பாடுகளை உடன் மேற்கொள்வதென யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சுற்றுச்சூழல் குழுவினர் தீர்மானித்துள்ளனர்.

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் உயர்மட்டக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் பேரவையின் தலைமையகத்தில் நடைபெற்றது.

மக்கள் மத்தியில் அரசியல் கருத்தரங்குகளை நடத்தி இன்றைய நெருக்கடியான நிலையை அவர்களுக்கு விளக்குவதென அங்கு தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், குடாநாட்டில் பரவிவரும் பாதீனியச் செடிகளை மேற்கொள்வதற்கும் முடிவு செய்யப்பட்டது.

முதற்கட்டமாக தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய் ஆகிய பிரதேசங்களில் உபகுழுக்கள் அமைத்து இதனைச் செயற்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. (8-86)

---

# யாழ். மாவட்டத்தில் தொழிற்சந்தை தொடங்கும் நடவடிக்கை தீவிரம்

யாழ்ப்பாணம்.ஜூன் 1

யாழ். மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்றவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான ஆலோசனைகளை வழங்கும் தொழிற்சந்தையை யாழ். மாவட்டத்தில் அமைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதுதொடர்பாக ஆராய்வதற்காக அண்மையில் சர்வதேச தொழிலாளர் நிறுவனம் மற்றும் கொழும்பு வர்த்தக சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் குடாநாட்டுக்கு வந்து ஆலோசனை நடத்தினர். இந்தத் தொழிற்சந்தையை அமைப்பதற்கு யாழ். நாவலர் வீதியில் இடமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் குறிப்பாகத் தமிழ் பிரதேசங்களில் ஒரு தொழிற்சந்தை - திருகோணமலை மாவட்டத்தில்- மட்டும் தற்போது இயங்கிவருகிறது.

வேலைவாய்ப்பற்றிருப்போருக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமுள்ள தனியார் துறைகளில் தகுதியான வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் பற்றிய விளக்கங்களும் ஆலோசனைகளும் தொழிற்சந்தை ஊடாக வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஓ-202-3)

---

# தாவீது அடிகளின் நினைவு தினம் இன்று

வலி.வடக்கு.ஜூன்1

பன்மொழி மேதையான கலாநிதி தாவீது அடிகளாரின் 24ஆவது நினைவு தினம் இன்றாகும்.

1981ஆம் ஆண்டு யாழ்.நூலகம் தீயிடப்பட்டு எரிக்கப்பட்ட செய்தியை அறிந்ததும் தாவீது அடிகளின் உயிர் பிரிந்தமை குறிப்பிடத்தக்கது.

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் அவரது நினைவாக இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுவதுடன் நினைவுக் கூட்டமும் இடம்பெறும்.

(8-86)

---

## நாளை

*வைகாசி 19*
*வியாழக்கிழமை*
*02.06.2005*
*திதி : ஏகாதசி*
*பின்னிரவு 03.43 வரை*
*நட்சத்திரம் : ரேவதி*
*பின்னிரவு 02.52 வரை*
*ஏகாதசி விரதம்*
*சுபநேரம் : 07.22 - 08.52*
*ராகுகாலம்: 01.22 - 02.52*
*(யாவும் பழைய நேரப்படி)*

---

# சுற்றாடல் தினத்தையொட்டி மாணவரிடையே ஓவியப் போட்டி

யாழ்ப்பாணம்.ஜூன் 1

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சுற்றுச்சூழல் முகாமைத்துவப் பிரிவு, பாடசாலை மாணவர்களிடையே ஓவியப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு மாநகரசபை பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

ஆரம்பப் பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என 3 பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இப்போட்டிக்கு ஒவ்வொரு பாடசாலையிலிருந்து ஒவ்வொரு பிரிவிலும் தலா 3 மாணவர்கள் வீதம் பங்குபற்றமுடியும்.

போட்டியில் பங்குபற்றும் மாணவர்களின் விவரங்களை 'சுற்றுச்சூழல் முகாமைத்துவப் பிரிவு, மாநகரசபை, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் ரி.என்.சூரியமூர்த்தி கேட்டுள்ளார்.

(8-202)

---

## உதயவாக்கு

மன நிறைவு என்பது இயற்கையாகவே நம்மிடம் உள்ள செல்வம். ஆடம்பரம் என்பது நாமே தேடிக் கொள்ளும் வறுமை.

– சாக்ரடீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரசபை, சாவகச்சேரி

## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் 16-06-2005ஆம் திகதி 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதேதினம் 10.30 மணிக்குக் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

இவ்வேலையின் பொருட்டு நிர்மாணப் பயிற்சி நிலையத்தின் (இக்ராட்) தரம் எம் 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் கோருவதற்குத் தகைமையுடையவராவார்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்டதுமான வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூ. ச. | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் (வற்றுடன்) ரூ. ச. |
|---|---|---|
| 1) பொதுச்சந்தையில் திறந்த சந்தைக் கொட்டகை அமைத்தல் 40' 30' | 4,000.00 | 575.00 |
| 2) அம்மன் வீதி திருத்தம், வட்டாரம் - 2 கட்டம் (1) | 4,700.00 | 575.00 |
| 3) உப்புக்கேணி வீதி திருத்தம் - 1750' வட்டாரம் 8 | 6,800.00 | 575.00 |
| 4) செருக்கல் பிள்ளையார் கோயில் வீதி திருத்தம் 1500' | 6,300.00 | 575.00 |
| 5) அலுவலக வளாகத்தினுள் காவலாளி கொட்டகை அமைத்தல் | 2,000.00 | 575.00 |
| 6) அலுவலக வளாகத்தினுள் வாகன - தரிப்பிடக் கொட்டகை அமைத்தல். | 2,000.00 | 575.00 |

கேள்விப்பத்திரங்களைச் சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 14-06-2005ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப்படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி 'செயலாளர், நகரசபை, சாவகச்சேரி' என்ற முகவரிக்கும் இணைப்பிரதி 'பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும் 16-06-2005ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும். உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படவேண்டும்.

இதுதொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி கு.ஆறுமுகம்,
செயலாளர், நகரசபை,
சாவகச்சேரி.

நகரசபை, அலுவலகம்,
சாவகச்சேரி. 30-05-2005 (சி-43127)(26-11-18)

## அரசாங்க அறிவித்தல்

### தேருநர் பதிவேடுகள் திருத்தம் - 2005

1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 12(1) ஆம் பிரிவின்படி 2005ஆம் ஆண்டிற்குரிய யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதிக்கான தேருநர் பதிவேடுகள் திருத்தம் ஆரம்பமாகிவிட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

(2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் 2004ஆம் ஆண்டு தேருநர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலரால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

| காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் இடம் | காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் தேருநர் இடாப்பும் அல்லது அவற்றின் பாகங்களும் |
|---|---|
| 01. மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் | யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர் இடாப்புக்களின் பிரதிகள் அனைத்தும். |
| 02. பிரதேச செயலகம்/உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள வாக்காளர்களின் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள். |
| 03. மாநகர/நகர/பிரதேச சபை அலுவலகங்கள் | ஒவ்வொரு மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள் அடங்கிய பகுதியினுள் வதியும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள். |
| 04. ஒவ்வொரு கிராம அலுவலர்களின் அலுவலகம் | ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிற்குள் வசிக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள். |
| 05. ஒவ்வொரு அஞ்சல் அலுவலகம். | ஒவ்வொரு அஞ்சல் அலுவலகம் அமைந்துள்ள பிரதேசத்தினுள் வசிக்கும் எல்லா வாக்காளர்களினதும் பெயர்கள் அடங்கிய தேருநர் இடாப்பின் பாகங்கள். |

(3) ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு வாக்காளராகப் பதிவதற்குத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர், வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிட்ட அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள வாக்காளர் இடாப்புக்களைப் பார்வையிடுவதன் மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

(4) வாக்காளர் இடாப்பை அல்லது அதன் பொருத்தமான பாகத்தைப் பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லை எனக் காணும் ஒவ்வொருவரும் 2005ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி, 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினையுடைய ஒவ்வொருவரும் தத்தமது பகுதிக் கிராம அலுவலரிடம் 2005ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் 2005 ஜூன் மாதம் 30ஆம் திகதி வரையும் இவற்றுக்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பூரணப்படுத்தி அவற்றினை மீளக் கிராம அலுவலரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

உதவிப் பதியும் அலுவலர்,
தேர்தல் மாவட்டம்
இல.10 - யாழ்ப்பாணம்.

தேர்தல்கள் அலுவலகம்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம். (சி 43119)(26-11-18)

# இசை நிகழ்ச்சியில் மோ.சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், ஜூன்1

யாழ்.பொது விளையாட்டரங்கில் நடைபெற்ற இசைநிகழ்ச்சி ஒன்றைப் பார்க்கச் சென்ற ரசிகர்களின் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்கள் என்பன திருடப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று யாழ்.பொது விளையாட்டரங்கில் இசைநிகழ்வு ஒன்றினை நடத்தியது

இதனைப் பார்வையிடுவதற்குப் பெருமளவான ரசிகர்கள் சென்றனர்.

இவர்களில் சிலரின் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்கள் என்பன திருடப்பட்டுள்ளன. இதுவரை யாழ்.பொலீஸ் நிலையத்தில் இது தொடர்பாக மூன்று முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஒரு மோட்டார் சைக்கிளும் இரண்டு சைக்கிளும் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலர் முறைப்பாடு செய்ய வந்தபோதும் உரிய ஆதாரங்களுடன் வந்து முறைப்பாடு செய்யும்படி பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இத்திருட்டுத் தொடர்பாக யாழ்.குடாநாட்டிலுள்ள சகல பொலீஸ் நிலையங்களுக்கும் தெரியப்படுத்தியுள்ளதாகப் பொலீஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (8-7)


சென்றல் சேவிஸ் ஸ்ரேஷனில் சேவிஸ் செய்யவேண்டுமா?

யாழ்ப்பாணத்தில், நெல்லியடி பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள




லங்கா அசோக் லேலண்ட் நிறுவனத்தினரின் நிபுணர்களால் உங்கள் வாகனங்களைச் சேவிஸ் செய்துகொள்ளலாம்.

நாடுங்கள்:
சென்றல் சேவிஸ் ஸ்ரேஷன்
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

(36015)(50-15-45)

Studying in LONDON
could change your life forever....

Middlesex University International

கருத்தரங்கு

மேற்படி பல்கலைக்கழகத்தில் பிரித்தானியா சென்று பட்டப்படிப்பினை மேற்கொள்ள விரும்பும் மாணவர்களிற்கான கருத்தரங்கு
காலம் 05.06.2005 ஞாயிற்றுக்கிழமை
காலை 10.00மணி
IIS City Campus,
181, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இக்கருத்தரங்கில் மேற்படி பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

மாணவர்கள் தங்கள் தகைமைக்கு ஏற்ப கல்வியை தெரிவு செய்தல், கல்விகற்கும் காலத்தில் வேலைவாய்ப்புக்கள், Visa ஒழுங்குகள் பற்றிய விளக்கங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆர்வமுள்ள மாணவர்கள், பெற்றோர்கள் பங்கு பற்றி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். ( A/L 2005 பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களும் பங்குபற்றிப் பயனடையலாம் )

UNDERGRADUATE & POSTGRADUATE SUBJECT AREAS
- Accounting, Finance & Economics
- Art, Design & Product Design Engineering
- Biological & Health Sciences
- Business & Management Studies
- Computing & IT
- Dance, Drama, Music & Performing Arts
- Humanities & Cultural Studies
- Law & Criminology
- Social Sciences
- Teaching & Education
- English & Mass Communication

Come, Join....
Middlesex University
a Top 20* UK university

Contact:
IIS City Campus
# 181, Navalar Road, Jaffna.
Tel No. 021 222 8060


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிந்துனுவெவ படுகொலை குற்றவாளிகள் விடுவிப்புக்கு கண்டனம்

# இலங்கையின் நீதித்துறைக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழ வேண்டிய தருணம் இது

## ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கை

ஹொங்கொங்சிற்றி,ஜுன்1

இலங்கையின் நீதித்துறைக்கு எதிராக அந்நாட்டு மக்கள் கிளர்ந்தெழவேண்டிய நேரம் இது எனத் தெரிவித்துள்ளது ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு.

பிந்துனுவெவப் படுகொலை வழக்கில் குற்றவாளிகளாக எஞ்சியிருந்த நால்வரும்கூட அண்மையில் உயர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர். அதற்குத் தனது கடும் கண்டனத்தையும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கை நீதிமுறைமையானது குற்றம் இழைத்தோரைத் தண்டிக்காது காப்பாற்றுவதை உறுதிசெய்வதன் மூலம் குற்றமிழைக்கிறது என்றும் காட்டமாகக் கருத்துத் தெரிவித்துள்ளது ஆணைக்குழு.

ஹொங்கொங்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஒரு மனித உரிமைகள் அமைப்பு ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு. பிந்துனுவெவ குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டமை குறித்து அது வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 25 ஆம் திகதி 25 இற்கும் அதிகமான தமிழ் இளைஞர்கள் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்படனர். இதனைச் செய்தவர்கள் சிங்களவர்கள்.

இந்தச் சம்பவத்தில் யார் உண்மையான சூத்திரதாரிகள்? இதற்குப் பின்னால் இருந்து இயக்குவித்தவர்கள் யார்? என்ற கேள்விகளுக்கு இலங்கை நீதித்துறையிடம் பதில் இல்லை.

இந்தப் படுகொலையில் இருந்து தப்பிப் பிழைத்தோரிடமும் பலியானோரின் உறவினிடமும் கிட்டத்தட்ட ஐந்து வருடங்களாக இந்தக் கேள்விகள் உள்ளன. இதற்குரிய பதில் அவர்களுக்கும் தெரிவிக்கப்படவில்லை.

இந்தப் புனர்வாழ்வு முகாம் அரச பாதுகாப்பில்தான் உள்ளது. அப்படியிருந்தும் படுமோசமான முறையில் அங்கு தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால், குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் செயல் ஒன்றே ஒன்றைத்தான் உறுதி செய்துள்ளது. அது இலங்கை நீதித்துறையானது குற்றமிழைத்தோரைத் தண்டிக்காது காப்பாற்றுவதை உறுதிசெய்து குற்றம் புரிகிறது என்பதுதான்.

இந்தப் படுகொலை குறித்து ஆரம்பத்தில் 41 பேர் மீது குற்றம்சுமத்தப்பட்டிருந்தது. இலங்கை நீதிமன்றுகள் படிப்படியாக அனைவரையும் குற்றத்தில் இருந்து விடுவித்தன. அவர்கள் மீது குற்றம் சுமத்துவதற்கு ஆதாரங்கள் இல்லை எனத் தெரிவித்தே அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

குற்றம்சுமத்தப்பட்டு எஞ்சியிருந்த நான்கு பேரும்கூட கடந்த 27 ஆம் திகதி உயர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர். அவர்களுக்கு எதிரான ஆதாரங்கள் போதியளவில் இல்லை எனத் தெரிவித்தே . அவர்களும் விடுவிக்கப்பட்டனர்.

இந்தப் படுகொலைகள் நடந்த விதம் படுமோசமானதும் குரோதமானதுமாகும். இதில் சந்தேகமில்லை. இந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசைச் சார்ந்தது. எனினும், அரசு தனது கடமையில் தவறிவிட்டது.

இந்தப் படுகொலையைப் புரிந்த உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பதைக் கண்டறிய இலங்கை நீதித்துறைக்கு இயலாது போயுள்ளது.

இது வேண்டுமென்றே இடம்பெற்றதா? அல்லது புலனாய்வு அதிகாரிகளின் இயலாமையா? என்பன போன்ற விவரங்கள் சிலவேளை எப்போதுமே தெரியாமல் போகக்கூடும்.

எனினும், இப்படுகொலை விடயத்தில் நீதியை வழங்கத் தவறியமைக்கு இலங்கை அரசே முழுப் பொறுப்பு, இவ்விடயம் மிகத் தெளிவானதாகும்.

இது கண்டிப்பதற்குரியது. இலங்கை நாடு அதன் நீதித்துறையின் நிர்வாகத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கவேண்டிய வேளை இது. ஒழுக்கமான சமூகமாக இலங்கையர்கள் வாழ்வதற்குரிய தகுதியை இது சீரழிக்கிறது.

மக்களால் நீதித்துறை நிர்வாகத்தைத் திருத்தமுடியும். மக்கள் இதில் தலையிடாது தவிர்த்துக் கொண்டால், அவர்களது நீதித்துறையைக் காப்பாற்றாது ஒதுங்கிக்கொண்டால், சிறந்த பண்பை, ஒழுக்கசீலத்தை இழந்துவிட்ட சமூகங்களுடன் அவர்களும் சேர்ந்துகொள்ள வேண்டியிருக்கும்.

- இப்படி ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (க-8)

## உத்தேசப் பொதுக்கட்டமைப்பால் படைமுகாம்களுக்குப் பாதிப்பில்லை

### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உறுதி

புலிகளுடன் சேர்ந்து உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பால் பாதுகாப்புப் படையினரின் முகாம்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படமாட்டாது என உறுதியளித்துள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

பாதுகாப்பு உயர் அதிகாரிகள், முப்படைத் தளபதிகள் ஆகியோருடனான பிரத்தியேகக் கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இந்த உறுதிமொழியைத் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

வடக்கு - கிழக்கில் அமையவுள்ள பொதுக் கட்டமைப்பு வரையறைக்குள் படைமுகாம்கள், உயர்பாதுகாப்பு வலயம் ஆகியன அடங்கா. அவற்றுக்கு விதிவிலக்களிக்கப்படும் எனவும் ஜனாதிபதி மேலும் விளக்கியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு தோற்றுவிக்கப்படுமாயின் திருகோணமலை, காங்கேசன்துறைத் துறைமுகங்கள் மற்றும் இராணுவ முகாம்கள் தொடர்பில் தெளிவை ஏற்படுத்தப் படையதிகாரிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். அதன் பின்னரே ஜனாதிபதியின் கவனம் இவ்விடயத்தின்பால் ஈர்க்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-8)

## கல்வியங்காட்டில் மதகு புனரமைப்பு

கல்வியங்காடு சந்திக்கு அண்மையில் பருத்தித்துறை வீதியில் சேதமடைந்து காணப்பட்ட மதகின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த சில மாதங்களாகச் சேதமடைந்து காணப்பட்ட இந்த மதகின் ஊடாக மக்கள் போக்குவரத்துச் செய்வதற்குப் பெரும் சிரமப்பட்டு வந்தனர்.

தற்போது மதகின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் வாகனங்கள் செல்வதற்கும் மற்றும் மக்கள் பயணம் மேற்கொள்வதற்கும் வீதியோரத்தில் தற்காலிகப் பாதை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. (க-17)

## விவேகானந்த நூல்களின் கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம்,ஜுன்1

சென்னை ஸ்ரீ ராமகிருஷ்ணமடத்து ராமகிருஷ்ண விவேகானந்த நூல்களின் கண்காட்சியும் விற்பனையும் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வேம்படி உயர்தர மகளிர் பாடசாலையில் ஆரம்பமாகவுள்ளன.

இதன்போது வேம்படி உயர்தர மகளிர் பாடசாலை அதிபர் திருமதி கமலா பொன்னம்பலத்திடம் கோவை ராமகிருஷ்ணமிஷன் வித்தியாலய வெளியீடான திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு அன்பளிப்புச் செய்யப்படவுள்ளது.(8-202)

அரசமைப்பின் 6 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம்

# தமிழரின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை ஒழித்ததாலேயே புலிகள் ஏகப்பிரதிநிதிகளாகினர்

## அமைச்சர் டி.யூ.குணசேகர கருத்து

அரசமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தின் மூலம் தமிழ்மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இல்லாதொழிக்கப்பட்டதாலேயே தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தமது ஏகப்பிரதிநிதிகளாகக் கருதத் தலைப்பட்டனர். இதனை எவரும் மறுக்கமுடியாது என அடித்துக் கூறுகின்றார் அரசியலமைப்பு, சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் டி.யு. குணசேகர.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இடம்பெற்ற 'சுபராதி' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

சமாதான முன்னெடுப்புகளைத் துரிதப்படுத்தி நடைமுறைப்படுத்துவதாலோ அல்லது பொதுக் கட்டமைப்பு ஏற்படுத்துவதாலோ நாடு பிளவுபடும் வாய்ப்புகள் இல்லை.

தென்பகுதியிலுள்ள கடும் இனவாத சக்திகளினால் வடக்கு - கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் மேலும் பலமடைந்து வருகின்றனர் என்பதுதான் உண்மை.



நாம் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த நம்பிக்கையை வெல்வதன் மூலம் மட்டுமே தமிழீழ விடுதலைப் புலிகளை வலுவிழக்கச் செய்யமுடியும்.

சமவுரிமை, வளப்பகிர்வு போன்ற சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாகவே இனப்பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதேவேளை கல்வி, பொருளாதார அபிவிருத்தி என்பனவற்றின் ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியும். சமாதானமும் பொருளாதார அபிவிருத்தியும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டவை. எனவே, நிலையான சமாதானத்திற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் முன்னுரிமை வழங்கப்படவேண்டும எனவும் அமைச்சர் டி.யூ.குணசேகர கூறினார். (க-8)

# வவுனியா நீதிபதிக்கு கொலை மிரட்டல் சந்தேகநபர் கைதாகி விளக்கமறியலில்

வவுனியா,ஜுன்1

வவுனியா மாவட்ட நீதிபதிக்கு கொலை மிரட்டல் கடிதம் எழுதினார் என்ற சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார். நீதிமன்ற உத்தரவின் பேரில் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அந்த இளைஞரது அறையில் இருந்த மேலும் இரு கொலை மிரட்டல் கடிதங்களையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர். தமிழ் ஆயுதக்குழு ஒன்றின் கடிதத் தலைப்பில் இந்த மிரட்டல் கடிதங்கள் வரையப்பட்டுள்ளன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இதே கடிதத் தலைப்பிலான கொலை மிரட்டல் கடிதம் கடந்த 25ஆம் திகதி வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியனுக்குக் கிடைத்தது. இதுபற்றி நீதிபதி வவுனியாப் பொலீஸாரிடம் முறைப்பாடு செய்தார்.

வன்னிப் பிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் மகிந்த பத்தேவலவின் பணிப்பிற்கு அமைய இது குறித்து விசாரிக்க சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தென்னக்கோன் பொறுப்பில் விசேட பொலீஸ் குழு அமைக்கப்பட்டது.

விசாரணையில் ஈடுபட்ட பொலீஸார் சந்தேகநபரான இளைஞர் ஒருவரைக் கைது செய்தனர். "அவரது அறையைச் சோதனையிட்ட போது அங்கு வவுனியா அரச அதிபருக்கும், கண்ணிவெடி அகற்றும் தொண்டர் நிறுவன உயரதிகாரி ஒருவருக்கும் எழுதப்பட்ட கொலை மிரட்டல் கடிதவாசகங்கள் காணப்பட்டன." - என்றார் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தென்னக்கோன். அந்தக் கடித வாசகங்கள் நீதிபதிக்குக் கிடைத்த கடிதத்தின் வாசகங்களை ஒத்திருந்தன - என்றும் அவர் தெரிவித்தார்.

சந்தேகநபர் வவுனியா பதில் நீதிவான் எஸ்.சிற்றம்பலம் முன்பாக ஆஜர்செய்யப்பட்டார். இதனை விசாரித்த நீதிவான் அவரை ஜுன் மாதம் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். இச்சம்பவம தொடர்பாக நீதிச்சேவை ஆணைக்குழுவின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவருமாறு அவர் உத்தரவிட்டார். கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேகநபர், வவுனியாவில் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள சர்வதேச தொண்டர் நிறுவனம் ஒன்றில் பணியாற்றிவருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# புலிகளின் தளபதிகள் கிழக்கே திரும்ப ஹெலி வசதிக்கு அரசு பின்னடிப்பு

கிழக்கிலிருந்து வன்னி சென்றிருந்த விடுதலைப் புலிகளின் தளபதிகள் தமது இடங்களுக்குத் திரும்புவதற்கான ஹெலி வசதியை வழங்க அரசு பின்னடித்து வருகின்றது.

சமாதானச் செயலக வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளன.

வன்னியில் தங்கியுள்ள புலிகளின் திருகோணமலைத் தளபதி கேணல் சொர்ணம் தனது பகுதிக்குத் திரும்ப ஹெலி வசதியை ஏற்படுத்தித்தருமாறு புலிகளின் சமாதானச் செயலகம் கடந்த 2 ஆம் திகதி அரச சமாதானச் செயலகத்திற்கு விண்ணப்பித்திருந்தது. ஆனால், அதற்கான பதில் இன்னும் கிளிநொச்சிக்கு அறிவிக்கப்படவில்லை. அதேபோன்று வன்னி சென்ற மட்டக்களப்பு மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பானுவும் தனது இடத்துக்குத் திரும்ப ஹெலி வசதிகோரி புலிகளின் சமாதானச் செயலகம் விடுத்திருந்த கோரிக்கைக்கும் அரச தரப்பால் இதுவரை பதிலளிக்கப்படவில்லை.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கிழக்கிலிருந்து வன்னிக்குச் சென்றிருந்த போராளிகள் திரும்புவதற்கான அனுமதியையும் அரசுத் தரப்பு வழங்கவில்லையெனவும் புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். அரச தரப்பின் இத்தகைய இழுத்தடிப்புப் போக்கால் புலிகள் மேலும் சீற்றமடைந்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-8)



தென்மராட்சிப் பிரதேசத்தில் 'நிக்கொட்' நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைப் பயனாளிகளுக்கு வழங்கும் நிகழ்வு மந்துவில் பகுதியில் அண்மையில் நடைபெற்றது.


இந்த நிகழ்வில் யாழ்.அரச அதிபர் க.கணேஸ் பயனாளி ஒருவரின் வீட்டின் நாடாவை வெட்டித் திறந்துவைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பொது மக்களில் ஒரு பகுதியினரையும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். தமிழர் புனர்வாழ்வுக் கழக யாழ்.மாவட்டப் பணிப்பாளர் ஜெயராஜ், தென்மராட்சி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.வீரசிங்கம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (படங்கள்: சாவகச்சேரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# யாழ். கட்டைப்பிராய் ஆலடி அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தான

# புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் 02.06.2005



**வைரவ அடியார்களே!**

நிகழும் மங்களகரமான பார்த்திப வருஷம் வைகாசித் திங்கள் 19 ஆம் நாள் (02.06.2005) வியாழக்கிழமை காலை 7.14 மணி முதல் 9.10 மணிவரையுமுள்ள ரேவதி நட்சத்திரமும் மிதுன லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த காலை வேளையில் -

எல்லாம்வல்ல ஞானவைரவ மூர்த்திக்குப் புதிதாக மெருகூட்டி விமானம் அமைத்த ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியிருப்பதால் அத்தருணமும் அதற்கு முன்னும் பின்னும் நடைபெறவுள்ள கிரியைகளிலும் பங்குபற்றித் தரிசித்து அருள்பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

**கும்பாபிஷேக கிரியா கால விவரம்**

**01-06-2005 புதன்கிழமை காலை முதல் பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல், பால் அபிஷேகம், மாலை வரை தொடர்ந்து யாகபூசை, தீபாராதனை நடைபெறும்.**

**02-06-2005 வியாழக்கிழமை காலை 7.14 மணிமுதல் 9.10 மணிக்குள் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து தச தர்சனம், மஹா அபிஷேகம், சம்பாவனைகள் இடம்பெறும். தொடர்ந்து மண்டலாபிஷேகம் 12 நாள்கள் நடைபெறும்.**

**குருமார் விவரம்**

**பிரம்மஸ்ரீ சீதாராமகிருஷ்ண சர்மா** ஆலய நித்திய பூசைக்குரு - கல்வியங்காடு

மஹா கும்பாபிஷேக பிரதம குரு:

சிவாகம கிரியாஜோதி **சிவஸ்ரீ க.குகதாசக்குருக்கள்** (உயரப்புலம், ஆனைக்கோட்டை)

**15-06-2005 புதன்கிழமை விசேட மேளக் கச்சேரி - சுதா குழுவினர்**

**இன்னிசைக் கலை நிகழ்வு - அருணா இசைக் குழுவினர்**

**கட்டைப்பிராய் மாணவ, மாணவிகளின் கலைநிகழ்வு**

அடியார்கள் வந்து தரிசித்து அருள்பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**மலர் தொகுப்பு: ஈசன்**

**◆◆◆◆◆ விழாச் சிறப்புற வாழ்த்துவோர் ◆◆◆◆◆**


**தம்பிஜயா அன் கோ**
மின்சார, குளியலறைப் பொருள்கள், பைப் பொருத்துதல், வீட்டுத் தளபாடம் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.
**இல.62/9, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.** தொ.பே.:021 222 5508.
கிளை:
**திஷங்கா மலிரி சொப்**
பருத்தித்துறை வீதி, நல்லூர் மாக்கற், கல்வியங்காடு. தொ.பே.:021 222 6788.

**குணபால வெல்டிங் வேர்க்ஸ் சொப்**
சிறந்த தொழில்நுட்ப நிபுணர்களின் உதவியுடன் உங்கள் உழவு இயந்திரங்கள், இழுவைப் பெட்டிகள், கலப்பைகள் போன்றவற்றை நவீன முறையில் திருத்தித் தர நீங்கள் நாடவேண்டிய தரமான ஸ்தாபனம்.
பருத்தித்துறை வீதி, 343, கல்வியங்காடு.
தொ.பே.0777265235.

**தர்மராசா மர அரிவுத் தொழிலகம்**
279, அரசடி வீதி, கந்தர்மடம். யாழ்ப்பாணம்.

**ஷீலா நகையகம்**
**Sheela Nagaiyagam**
நவீன டிசைன் நகைகளை உத்தரவாதத்துடன் செய்து பெற்றிட நாடுங்கள்:
தொ.பே.077-6120468
177E, Kasthuriar Road, Jaffna.
177E, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**WELLA HAIR DRESSING**
DEALERS IN SALOON ITEMS SOLD IN WHOLE SALES & RETAIL
சலூனுக்குத் தேவையான உபகரணங்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் இங்கே விற்பனைக்கு உண்டு.
**No.15, Wolfendhal Street, Colombo-13.**
**Tel: 2451059.**

**உஷா பன்சி கவுஸ்**
பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய், கோப்பாய்.
பாதணிகள், அழகுசாதன அன்பளிப்புகள் அனைத்துக்கும் நாடுங்கள்
**USHA FANCY HOUSE**
தொ.பே.222 5167.
கிளை:
**உஷா தொலைத்தொடர்பு நிலையம்**
கற்பகப் பிள்ளையார் கோயிலடி, இருபாலை.

**ஊர்மிளா ஸ்ருடியோ அன் டிஜிற்றல் வீடியோ**
தொலைத்தொடர்பு சேவை
யாழ்.-கொழும்பு பயணிகள் பஸ் சேவை
3 ஆம் கட்டை, கல்வியங்காடு.
தொ.பே.021222 6587

புடைவை ரசிகர்களின் சாம்ராஜ்யம்
**மிலேனியம் பெஷன் & பொம்பே பஸார்**
இல.10, ... வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. ...
Mobile: 0777 311486.

**ரட்னா கட்டப்பொருள் விநியோகம்**
மெசினால் அரியப்பட்ட தரமான கொங்கிறீற் கற்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
பல அளவுகளில் ஓடர்களுக்கு செய்துகொடுக்கப்படும்.
பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய்.
தொ.பே. 021222 6983.

**கே.கே.எஸ். ஸ்பெயர் பாட்ஸ்**
மோட்டார் சைக்கிள், ஓட்டோ உதிரிப் பாகங்கள், றபர் புஷ், எலக்ரோனிக் பொருள்கள் விற்பனையாளர்
பருத்தித்துறை வீதி, நல்லூர் மாக்கற், கல்வியங்காடு.
தொ.பேசி 077 6127472.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சமாதானச் சூழலிலும் வசதிவாய்ப்புகளை பெறத்தவறிய யாழ். மருத்துவமனை...




குடாநாட்டில் சமாதானச் சூழல் நிலவி வரும் இவ்வேளையில் ஆங்காங்கே அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் சிறு அளவிலேனும் நடைபெற்று வருகின்றன.

பலதுறைகளிலும் காணப்பட்ட பின்னடைவு நிலையைச் சீர்செய்ய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால், சுகாதாரத்துறை மட்டும் போர்க்காலகட்டத்தில் இருந்தது போலவே இப்போதும் நீடிக்கின்றது.

இதற்கு உதாரணமாக யாழ்.போதனா மருத்துவமனையைக் குறிப்பிடலாம்.

இந்த மருத்துவமனையானது யாழ்.மாவட்ட மக்களின் உயிர் காக்கும் மைய நிலையமாக விளங்குகிறது.

தற்போது நிலவும் சமாதானச் சூழலில் வன்னிப் பெருளநிலப்பரப்பு மக்களின் மருத்துவ சேவையினையும் சேர்த்தே அது கவனிக்க வேண்டியுள்ளது.

வன்னிப் பிரதேச ஆஸ்பத்திரிகளில் இருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக நோயாளிகள் யாழ்.போதனா மருத்துவமனைக்கே அனுப்பப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மருத்துவமனையில் நோயாளிகள் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தவண்ணமுள்ளது. ஆனால், இந்த மருத்துவமனையானது யுத்தகாலத்தில் எவ்வாறான வசதியீனங்களுக்கு மத்தியில் இயங்கி வந்ததோ அதுபோலவே இன்று நிலவும் சமாதான காலத்திலும் இயங்கி வருகின்றது.

இதனால் பல லட்சக்கணக்கான மக்களின் உயிரைக் காவாந்து பண்ணுகின்ற மருத்துவமனை தனது மக்களுக்கான சேவையினை திருப்திகரமாகச் செய்யமுடியாமல் திணறிக் கொண்டிருக்கிறது.

தென்னிலங்கையைப் பொறுத்தவரை அங்குள்ள மருத்துவமனைகள் சகல வசதிகளுடனும் இயங்கிவருவது கண்கூடு. அங்கு தனியார் மருத்துவமனைகள் கூட திறம்படச் சேவையாற்றி வருகின்றன.

இந்த நிலையில், யாழ்.மாவட்டத்தில் வாழுகின்ற மக்களின் உயிரைக் காப்பாற்றும் பணி செய்யும் மருத்துவமனையை சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சு கவனத்தில் கொள்ளாதது ஏன்? என்ற கேள்வி எழுகிறது. அந்தக் கேள்வி இதில் கூட அரசு தன்னுடைய அரசியல் புறக்கணிப்பை - இனவெறியை காட்டிக் கொள்கிறதோ? என்ற நிலைப்பாட்டைச் சுட்டி நிற்கிறது.

**வன்னி தேசிய மருத்துவமனை**

இதேவேளை -

வன்னிப் ளபெருநிலப்பரப்பில் பலகோடி ரூபா செலவில் தமிழீழத் தேசிய மருத்துவமனை ஒன்று உருப்பெற உள்ளது. அதற்கான அடிக் கல்லும் நடப்பட்டுள்ளது. அந்த வைத்தியசாலை சகல வசதிகளும் கூடிய ஒரு பரிணாமம் பெறும்போது இங்கிருந்து மேலதிக சிகிச்சைக் காகக் கொழும்பு



இது அகதி முகாமல்ல... ஆஸ்பத்திரி விடுதி

கொண்டுசெல்லவேண்டிய நோயாளி களை வன்னி நிலப்பரப்பின தமிழீழத் தேசிய மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லக்கூடிய வசதி வாய்ப்பு ஏற்படலாம்.

யாழ். மருத்துவமனையின் நிலைவரம் குறித்து அங்கு கடமையாற்றும் உயர் அதிகாரிகளிடம் பேசியபோது அவர்கள் அங்குள்ள நிறைகளைச் சுட்டிக்காட்டுவதைவிட குறைகளைச் சுட்டிக்காட்டுவதே அதிகமாக உள்ளது.

இங்கு தற்போது அதிகரித்துள்ள நோயாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் குறைந்தது 240 வைத்தியர்கள் பணிபுரிந்தால் தான் துரிதமாக, திருப்திகரமான சேவையினை நோயாளிகளுக்கு வழங்கமுடியும். ஆனால், இப்போது 140 வைத்தியர்களே கடமைபுரிகின்றார்கள். அதுவும் ஒவ்வொரு பிரிவிற்கும் உரிய வைத்திய நிபுணர்கள் இல்லை. இத்தகைய வெற்றிடமானது நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருக்கின்றது. குறைந்தது 500 தாதிமார்கள் கடமையாற்ற வேண்டிய தேவை உள்ளது. ஆனால், 200 தாதிமார்களே கடமையாற்றுகின்றனர்.

சிற்றூழியர்களின் ஆளணிப் பற்றாக்குறை அதைவிட மோசமான நிலை. ஒரு வார்ட்டுக்கு (விடுதி) குறைந்தது நான்கு ஊழியர்கள் பணிக்கமர்த்தப்படவேண்டும். ஆனால், ஒரு வார்ட்டுக்கு ஒரு சிற்றூழியர் என்ற ரீதியிலேயே கடமை புரிகிறார்கள்.

## சுகாதார அமைச்சின் பாராமுகமா? அதிகாரிகளின் அக்கறையின்மையா?



லிப்டாக மாறி நோயாளரைத் தூக்கிச் செல்லும் ஊழியர்கள்.



'லிப்ட்' இயந்திரத்திற்காகத் தவம் கிடக்கும் அதற்கான கட்டடம்.

வெளிநோயாளர் பிரிவில் மட்டும் ஒரு நாளைக்கு 600இற்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சைக்காக வருகின்றனர். இவர்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்யவென வெளிநோயாளர் பிரிவில் சுமார் ஒன்பது ஊழியர்களாவது கடமையில் இருக்கவேண்டும். ஆனால், நான்கு பேர் மட்டுமே கடமைபுரிகின்றனர். அதிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் இரண்டு பேர் மட்டுமே கடமைபுரிகின்றனர்.

யாழ் மாவட்டத்தில் சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றுபவர்களை வைத்தியசாலைகளில் ஊழியர்களாக உள்வாங்குவதறகு அண்மையில் நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டுள்ளது. ஆனால் இன்னும் அவர்களை உள்வாங்கவில்லை. அவ்வாறு அவர்களை உள்வாங்கும் பட்சத்தில் இவ்வாறு வெற்றிடங்களாக உள்ள சிற்றூழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யமுடியுமல்லவா? அதனை இன்னும் சம்பந்தப் பட்டவர்கள் செய்யாமல் இருப்பது ஏன்?

குடாநாட்டைப் பொறுத்தவரை அண்மைக் காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன.

விபத்துக்குள்ளாகிக் காயமடைவோர் மருததுவமனையில் அனுமதிக்கப்படும் பட்சத்தில் அவர்களுக்குரிய உடனடிச் சிகிச்சையினை வழங்குவதற்கு இங்கு 'விபத்துச் சேவைப் பிரிவு' ஒன்று இல்லை. அதனை உடனடியாக அமைத்துத் தருமாறு மருத்துவமனையின் நிர்வாகம் பல அரச தரப்பு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது. ஆனால், இதுவரைக்கும் அதனை அமைத்துக்கொடுப்பதற்கு எவரும் முன்வருவதாக இல்லை.

கொழும்பு, கண்டி மற்றும் குருநாகல் வைத்தியசாலைகளில் இந்த விபத்துச் சேவைப் பிரிவு நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டு இயங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

அங்கெல்லாம் அதனை அமைக்கமுடியும் போது இங்கு ஏன் அமைக்கமுடியாது?

**கவிதரன்**

உண்மையில் குடாநாட்டைப் பொறுத்தவரை வ்பத்துச் சேவைப்பிரிவொன்று அவசரம் - அவசியம் தேவை என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மறந்துவிடக்கூடாது.

இதைவிட நோயாளிகள் வார்ட்டுகளில் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கு போதுமானதான படுக்கை வசதிகள் இல்லை. இதனால் பல நோயாளிகள் தரையில் பாய் விரித்துப் படுத்து சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

குறிப்பாக 27ஆம், 28ஆம், 29ஆம் விடுதிகளில் இவ்வாறான அவலநிலை அதிகமாகக் காணப்படுகிறது.

**'லிப்ட்' வசதி இல்லை**

இதனைவிட 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம் ஆண்களுக்கான விடுதிகளில் 'லிப்ட்' வசதிகள் இன்னும் அமைத்துக்கொடுக்கப்பட வில்லை. 'லிப்ட்' வசதிக்கான வேலைகள் யாவும் நீண்ட காலத்துக்கு முன்னரே பூர்த்தியடைந்திருந்த போதிலும் அதற்குரிய லிப்ட் இயந்திரம் இங்கு வந்துசேரவில்லை. இத்தகைய நிலையால் மேற்படி விடுதிகளுக்கு நோயாளிகளைக் கொண்டு செல்லும் பட்சத்தில் சிற்றூழியர் பலருடைய உதவியை வலிந்து நாடவேண்டியுள்ளது. அவ்வாறு நோயாளியை பலர் சேர்ந்து மேலே தூக்கிச் செல்லும் சந்தர்ப்பங்களில் எங்கே கீழே தவறிவிழுந்து விடுவோமா என்ற அச்சஉணர்வு நேயாளிகள் மத்தியில் காணப்படுகிறது. இதனால், நோய் நிலை அதிகரித்து விடுகிறது.

இங்கிருந்து நோயாளிகளை மேலதிக சிகிச்சைக்காகக் கொழும்பு வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் பட்சத்தில் அதற்குரிய அம்புலன்ஸ் வசதிகள் போதியளவு இல்லை.

நான்கு அம்புலன்ஸ்கள் சேவையில் இருக்கின்றபோதிலும் அவசர சிகிச்சைக்காக கொழும்பு கொண்டுசெல்லும் நோயாளிக்குரிய வசதிகள் அம்புலன்ஸில் பொருத்தப்படவில்லை. இதனால், நோயாளிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

சகல வசதிகளும் பொருந்திய அம்புலன்ஸ் வண்டி ஒன்றினைப் பெற்றுத்தருமாறு அரச அதிபரிடம் மருத்துவமனை நிர்வாகம் கோரிக்கை ஒன்றினை முன்வைத்துள்ளது.

இந்தக் கோரிக்கையினை பரிசீலனை செய்து அதனை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவன செய்வார்களா?

**வெளிநோயாளர் பிரிவில்...**

அன்றாடம் சிகிச்சைக்கு வருகின்ற வெளிநோயாளர் பிரிவில் நோயாளிகளுக்குரிய இருக்கைகளும் இங்கு போதுமானதாக இருக்கவில்லை. இதனால், நோயாளிகள் பலர் நீண்ட நேரம் நின்றபடியே வரிசையில் காத்திருக்கிறார்கள். எனவே, மேற்படி மருத்துவமனையின் தேவைகள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில் இங்கு சகல வசதிகளையும் ஆளணிகளையும் பெற்றுக்கொடுத்து நோயாளர்களுக்கு சேவையினைத் திறம்பட, திருப்திகரமாக நிறைவேற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காலம் தாழ்த்தாமல் உரிய கவனமெடுத்து உரிய வசதிகளைப் பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும். ★

---

## திருமண மண்டபம் திறப்பு விழா

கட்டப்பிராய் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய கல்யாண மண்டபத் திறப்பு விழா எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பரிபாலன சபைத் தலைவர் கா.தவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

பொதுமக்களால் 40 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கல்யாண மண்டபத்தினை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் திறந்துவைப்பார்.

இந்த நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நிகழ்த்துவார்.

சிறப்புரையினை இந்து கலாசார அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சிவத்தமிழ்வித்தகர் சிவ. மாகலிங்கம், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன், கோப்பாய் பிரதேச செயலக உதவிப் பணிப்பாளர் செந்தில்நாதன் ஆகியோர் நிகழ்த்துவர். (எ-180)

## வடமராட்சிக் கிழக்குக் கடலில் வெளியூர் மீனவர்கள் தொழில்

வடமராட்சி,ஜூன்1

வடமராட்சி கிழக்கில் செம்பியன்பற்று, தாளையடி, ஆழியவளை, வெற்றிலைக்கேணி ஆகிய கடற்பகுதிகளில் வேறு ஊர்களைச் சேர்ந்த மீனவர்கள் கடற்றொழிலை ஆரம்பித்துள்ளனர்.

வேறு ஊர்களில் இருந்து வரும் மீனவர்கள் இப்பகுதிகளில் வாடிகள் அமைத்து தொழிலை மேற்கொண்டுவருகின்றனர்.

ஆனால், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இப்பகுதி மீனவர்களுக்கு இதுவரை கடற்றொழில் உபகரணங்கள் கிடைக்காமையினால் அவர்களால் கடற்றொழிலை ஆரம்பிக்க முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

வெளியூர் மீனவர்களிடம் பாதிக்கப்பட்ட இப்பிரதேச மீனவர்களில் சிலர் தொழில்வாய்ப்பினைப் பெற்றுள்ளார்கள். (த-173-182)

## கலைவிழா

கைதடி, ஜூன்1

சிறுப்பிட்டி தெற்கு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய கட்டட வளர்ச்சி நிதிக்காக நடத்தப்படும் மாபெரும் கலைவிழா எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை இரவு 8 மணிக்கு சிறுப்பிட்டி கலை ஒளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(எ-75-202)

## வெங்காயத்தின் விலை வடமராட்சியில் உயர்வு

வடமராட்சி,ஜூன்1

வடமராட்சிப் பிரதேசத்தில் வெங்காயத்தின் விலை வெகுவாக உயர்ந்துள்ளது.

வெங்காய அறுவடை முடிவடைந்துள்ள நிலையில் ஒரு அந்தர் வெங்காயம் மூவாயிரம் ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கொழும்புச் சந்தைக்கும், புத்தளம் பகுதியில் வெங்காயச் செய்கைக்காகவும் தினமும் பெரும் அளவில் வெங்காயம் லொறி களில் எடுத்துச்செல்லப்படுகின்றது. (த-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

## கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன. கீழே அட்டவணையில் குறிப்பிட்ட பிரகாரம் வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தையும் படிவக்கட்டணத்தையும் பணமாகச் செலுத்தி கேள்விப் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம். நிர்மாண பயிற்சி நிலையத்தில் (இக்ராட்) பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்கள் மாத்திரமே கேள்விப் பத்திரம் கோருவதற்கு தகைமையுடையவராவார். கேள்விப் பத்திரங்களை பெறுவதற்கு முன்னர் நிர்மாணப்பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப் படிவம் வழங்கல்: 30.05.2005 – 16.06.2005 வரை
கேள்விப்படிவம் ஏற்றல் : 20.06.2005 நண்பகல் 12 மணிவரை
கேள்விகள் திறத்தல்: 20.06.2005 பிற்பகல் 2.30 மணி

| வேலைவிவரம் | இக்ராட் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (வற்வரி உட்பட) |
|---|---|---|---|
| வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற நவீன சந்தைக் கடைகள் புனர்நிர்மாணம். | M8உம்அதற்கு மேற்பட்டதும் | 40000.00 | 575.00 |
| வேவில் வீதி வெள்ளத்தடுப்புச் சுவர் திருத்தம் | M9 | 6250.00 | 575.00 |
| செல்வச்சந்நிதி கோயில் அருகில் பொது மலசல கூடம் அமைத்தல் | M9 | 3300.00 | 575.00 |
| பொதுமண்டபம் அமைத்தல் கட்டம் 2 | M9 | 4750.00 | 575.00 |
| நவீன சந்தை முதலாவது தளத்திலுள்ள யன்னல்களுக்கு கிறில் வேலை செய்தல். | M9 | 3650.00 | 575.00 |

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரத்தின் மூலப்பிரதியை *"செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை"* என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை *"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்"* என்ற முகவரிக்கும் 20.06.2005ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப் புதல் வேண்டும். மேலதிக விவரங்களையும் நிபந்தனைகளையும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**நகராட்சிமன்ற அலுவலகம்,**
**வல்வெட்டித்துறை.**
**30.05.2005.**

**நா.தம்பிராஜா,**
செயலாளர்,
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.

(ஏ/43123)(42-18-15)

# புல்மோட்டையில் உண்ணாவிரதம்

கொழும்பு,ஜூன் 1

புல்மோட்டை கனியமணல் கூட்டுத்தாபனத்திலிருந்து இடைநிறுத்தப்பட்ட ஊழியர்கள் சிலர் நேற்றுமுன்தினம் முதல்சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

எந்தவித முன்னறிவித்தலுமின்றி கூட்டுத்தாபனத்திலிருந்து நூறு பேர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என ஊழியர்கள் தெரிவித்தனர். இடை நிறுத்தப்பட்ட தமக்கு மீண்டும் தொழில் தருமாறு கோரியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஐ.தே.கட்சி ஆட்சியிலிருந்த போது நிரந்தர அடிப்படை எதுவுமின்றி தொழில்வாய்ப்பு வழங்கப்பட்ட நூறு ஊழியர்களுக்கே இப்போது வேலை பறிபோயுள்ளது.

இது குறித்துப் புல்மோட்டை கனியமணல் கூட்டுத்தாபனத் தலைவர் எஸ்.உதுமாலெப்பை தெரிவிக்கையில், "இந்தநிலைமை தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சுடன் நான் பேச்சு நடத்தி தகுந்த நடவடிக்கை எடுப்பேன்" - என்றார். (க-8)

## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

இதுவரை காலமும் 239, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த எமது வியாபார ஸ்தலமான

## புனிதா நகைமாடம்

நிகழும் பார்த்திப வருஷம் வைகாசித் திங்கள் 18ஆம் நாள் இன்று (01.06.2005) புதன்கிழமை காலை 9 மணிக்கு (புதியநேரம்) ***இல.169 & 171, மின்சார நிலைய வீதி*** (யாழ்.பஸ்நிலையத்துக்கு முன்), யாழ்ப்பாணம் என்ற புதிய கட்டடத்துக்கு இடம்மாற்றப்பட்டு திறப்புவிழா செய்து ஆரம்பிக்கவுள்ளதால் அத்தருணம் எமது 20 வருட சேவையில் எம்மேல் நன்மதிப்பும் நம்பிக்கையும் வைத்து உற்சாகமூட்டிய வாடிக்கையாளர்கள், அன்பர்கள், அனைவரும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

169 & 171, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:**021 2227026**

உரிமையாளர்:
**புனிதா நகைமாடம்.**

(45932)(42-18-15)

### தமிழ் விழா

யாழ்ப்பாணம்,ஜூன்1

உடுவில் மகளிர் கல்லூரியின் தமிழ்விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (8-202)

### யாழ்.வளைவு மீள்திறப்புவிழா

யாழ்ப்பாணம்,ஜூன்1

செம்மணிப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 'யாழ்ப்பாணம் வரவேற்கிறது' நுழைவாயில் வளைவின் மீள்திறப்புவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.இவ்வளைவை யாழ்.மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசா வைபவரீதியாகத் திறந்து வைக்கவுள்ளார். (8-202)

### பெருமையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்


திருமதி. வனஜா சுரேஸ்குமார்


திரு. ஜெகநாதன் சுதர்சன்

எமது நிறுவனத்தினூடாக தகவல் தொழில்நுட்பமாணி (**Bachelor of Information Technology – BIT**) கற்கைநெறியைப் பூர்த்தி செய்து இன்று கொழும்புப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் எமது நிறுவன மாணவர்களான திருமதி. வனஜா சுரேஸ்குமார் திரு. ஜெகநாதன் சுதர்சன் ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமையுடன் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இயக்குநர்,
விரிவுரையாளர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்

**IIS City Campus**
**# 181, Navalar Road,**
**Jaffna.**


edexcel

BTEC

advancing learning, changing lives

Edexcel is the largest awarding body in the UK. It develops a diverse range of academic and vocational qualifications, prepares course specifications, assesses, examines and provides quality control of qualifications and certifies achievement. In the UK Edexcel qualifications are offered by over 4,200 secondary schools, 450 further education colleges, more than 80 higher education institutions, 800 public and private sector employers and, increasingly, e-learning providers. Internationally, Edexcel operates in 112 countries worldwide.

The organisation's strengths include the diversity of its products across academic and vocational sectors and more than 28 years' pedigree in providing 'Qualifications for Work'.

**ADMISSION ANNOUNCEMENT FOR ACADAMIC YEAR 2005/ 2006**
**HIGHER NATIONAL DIPLOMA ( HND )**

- ✓ ***What is a BTEC Higher National?*** The BTEC Higher National is one of the best-known BTEC qualifications that we offer. It's an undergraduate qualification that is roughly equivalent to the first half of a degree. People have tended to study a BTEC Higher National after a BTEC National.
- ✓ ***How many do I study?*** You only study for one BTEC qualification at a time. This lets you build and focus your knowledge and skills in a particular area.
- ✓ ***Where can I study for a BTEC Higher National?*** You can study for a BTEC Higher National at your nearest approved centre. To find out which one is closest to you, please contact your local Edexcel regional office.
- ✓ ***What can I do after I finish a BTEC Higher National?*** Most students will complete their degree after their BTEC Higher National. They can join in 3rd year of the degree program. They have the option to continue their degree in Sri Lanka, UK, USA, Canada, Australia and New Zealand. Others prefer to go straight into work when they've finished a BTEC Higher National – it gives you the right level of skills and knowledge to make a difference whatever subject you've studied.
- ✓ ***Who normally takes a BTEC Higher National?*** Anyone can take a BTEC Higher National – we would expect that students aged around 18 would be interested, as well as people at work who may want to get back into education, or who simply want to update or develop new skills that they can use at work.
- ✓ ***Will a BTEC Higher National get me a better job?*** BTEC Higher Nationals are well-recognised by universities and employers. So, whether you want to do a degree or earn money straight away, there's a BTEC Higher National for you.

**Computing**

| Unit code | Title |
|---|---|
| H1 21404P | Computer Platforms |
| H1 21405P | System Analysis& Designing |
| H1 21406P | Software Construction& Tools |
| H1 21407P | Computing Solution |
| H2 21408P | Quality Management Principles |
| H2 21409P | Communication Technology |
| H1 21411P | Networking |
| H1 21412P | Data Analysis and Design |
| H1 21413P | Visual Programming |
| H1 21416P | Introduction To Programming |
| H1 21418P | Computer Implementation Project |
| H2 21419P | Database Management System |
| H2 21421P | Website Management |
| H2 21423P | Object Oriented Programming |
| H2 21426P | Advanced Project |

**ELIGIBILITY**
2 Passes in A/L
Duration : 18 Months
(Full time)

**Software Engineering**

| Unit code | Title |
|---|---|
| H1 21404P | Computer Platforms |
| H1 21405P | System Analysis& Designing |
| H1 21406P | Software Construction& Tools |
| H1 21407P | Computing Solution |
| H2 21408P | Quality Management Principles |
| H2 21409P | Communication Technology |
| H1 21411P | Networking |
| H1 21412P | Data Analysis and Design |
| H1 21413P | Visual Programming |
| H1 21414P | Human Computer Interface |
| H1 21416P | Introduction to Programming |
| H2 21421P | Website Management |
| H1 21434P | Software Engineering Techniques |
| H2 21423P | Object Oriented Programming |
| H1 21431P | Implementation Project (Software Eng) |
| H1 21434P | Object Oriented Development |
| H2 21438P | Advanced Project |
| H1 21439P | Multimedia and Internet Development |

**ELIGIBILITY**
2 Passes in A/L
Duration : 24 Months
(Full time)

**Business Information Technology**

| Unit code | Title |
|---|---|
| H121404P | Computer Platforms |
| H121405P | System Analysis |
| H121406P | Software Constructs and Tools |
| H121407P | Computing Solutions |
| H121431P | Business Information Technology Implementation Project |
| H221408P | Quality Management Principles |
| H221409P | Communication Technology |
| H221432P | Advanced Business Information Technology Project |
| H121411P | Networking |
| H121412P | Data Analysis and Database Design |
| H121413P | Visual Programming |
| H121414P | Human Computer Interface |
| H121415P | End User Support |
| H121419P | Database Management Systems |
| H121430P | Business Application Development |
| H120751P | Financial Systems and Auditing |
| H221441P | Management Science |

**ELIGIBILITY**
2 Passes in A/L
Duration : 24 Months
(Full time)

www.edexcel.org.uk
**An Edexcel Approved Training Centre**
# 181, Navalar Road, Jaffna.
Tel:021 222 8060, 021 222 2201
Fax: 021 222 6933
E-mail: iis@sltnet.lk

IIS
CITY
CAMPUS


## சதுரங்கப் போட்டி -2005

யாழ்.மண்ணில் முதல்முறையாக மாபெரும்
**'Rapid chess Tournament'**

காலம்: **04.06.2005 காலை 8.30 மணி**
இடம்: **யாழ்.மத்திய கல்லூரி**

- இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ளலாம்.
- வெற்றி பெறும் முதல் 10 பேருக்கு பெறுமதி மிக்க பரிசுகள்
- ஆரம்பத்திலிருந்து சதுரங்கக் கடிகாரம் வைக்கப்படும்
- போட்டியானது **Knock out** முறையில் நடத்தப்படும்.

விண்ணப்ப முடிவுதிகதி: **02.06.2005**

தொடர்புகளுக்கு: **GKC Academy, 5, வைமன் வீதி, நல்லூர்.**

(36014)(42-18-15)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
03 – 04 – 1936



உதிர்வு
05 – 06 – 2002

## திருமதி நாகன் வெள்ளைச்சி

**திதி: 01.06.2005**

**ஆண்டுகள் மூன்று சென்றாலும்**
**ஆறவில்லை எங்கள் துயர்!**
**ஆனாலும் எங்கள் மனதில்**
**என்றும் நீங்கள் நிலைத்திருப்பீர்கள்!**
***உங்கள் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.***

*சரஸ்வதி வீதி,*
*புத்தூர் கிழக்கு,*
*புத்தூர்.*

மகன்: நா.சற்குணராசா (பிரான்ஸ்),
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(45998)(42-18-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ் இனத்தின் விடுதலை வேட்கைகளை கவிதையாக்கி போராட்டத்துக்கு வலுச்சேர்த்தவர்

## புதுவையின் நூல் வெளியீட்டு விழாவில் இளம்பரிதி

எமது இனத்தினுடைய விடுதலை வேட்கைகளையும் உள்ளாந்த இயல்புகளையும் கவிதை வடிவில் படைத்துப் போராட்டத்துக்கு வலுச் சேர்த்தவர் புதுவை அண்ணன்.

- இவ்வாறு புகழாரம் சூட்டினார் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி.

கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும்' என்ற கவிதைத் தொகுப்பு நூல் கடந்த 27ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் வெளியிட்டுவைக்கப்பட்டது.

அந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே இளம்பரிதி இதனைத் தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வெளிநாட்டு உதவி வழங்கும் நாடுகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்காகப் பொதுக் கட்டமைப்பைப் பற்றி பெரிதுபடுத்திப் பேசிய ஜனாதிபதி இப்போது மௌனம் சாதித்து வருகின்றார்.

எம்மால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாக யோசனைகள் உட்பட ஏனைய இணக்கப்பாடுகளையும் புறந்தள்ளித் தமிழினத்தை ஒதுக்கித்தள்ளும் பௌத்த - சிங்களப் பேரினவாதிகளுக்குப் பதிலடி கொடுப்போம்.

உதவி வழங்கும் நாடுகளின் உதவிகளை பெறுவதற்காகப் பொதுக்கட்டமைப்பைப் பற்றிக் கூறிவந்த சந்திரிகா, தனது உயிர் போனாலும் அதனை நிறைவேற்றுவேன் என்று நாடகமாடிப் பேரினவாதப் போக்கினையே கையாளுகின்றார்.

இவ்வாறான சூழ்நிலைகளைக் கவிதை வடிவில் மக்களுக்கு எடுத்துச்சொல்வதற்கு நேர்த்தியான - திறமைகொண்ட - கவிதை நூலை வெளியிடவேண்டியது மிகவும் அவசியமான ஒன்றே.

இலக்கியங்கள் தேசிய அரசியல் சார்ந்தவையாக இருக்கின்றபோதே அவை சமூகத்திற்கு உயிர்ப்பை ஊட்டுகின்றன.

அவ்வாறான படைப்புகளே வரலாற்றில் பதிவுசெய்யப்படுகின்றன அல்லது பாரதமாக்கப்படுகின்றன. அதேபோல அதன் படைப்புகள் தொடர்ந்து எமது சமூகத்தில் உருவாகவேண்டும்.

எங்களுடைய ஒரு வித்தியாசமான படைப்பாளியாக கவிஞர் புதுவை இரத்தினதுரை விளங்குகிறார். அவருடைய படைப்பு, பார்வை என்பன வித்தியாசமாக இருக்கின்றன. குடும்பம், உறவு, ஊர், பண்பாடு, பாரம்பரியம், மண், காலத்தோற்றத்தின் மரபுக்கேற்ற அந்தத் தன்மைகளை எளிமையான நடையிலேயே அனைவரும் ரசிக்கின்ற வகையில் அவரது படைப்புகள் இருக்கின்றன.

இன்றைய வெளியீடான 'பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும்' என்ற கவிதைத் தொகுப்பு நூல் சர்வதேசத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற எமது உறவுகளால் வெளியிடப்பட்டிருக்கின்றது. ஆயினும், எங்களுடைய தாயகத்தில் இந்த நூல் அறிமுகம் செய்யப்படவேண்டும் என்ற கலை இலக்கியப் படைப்பாளிகளதும் ஆர்வலர்களதும் ஆர்வத்தில் இந் நூல் வெளியிடப்படுகின்றது.

எமது சமூகத்தினுடைய விடுதலை வேட்கைகளை மட்டுமல்லாது உள்ளார்ந்த இயல்புகளையும் காட்சி வடிவமாக வெளிக்கொண்டு வரும புதுவை அண்ணனின் இயல்புணர்வு இந் நூலினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது - என்றார் இளம்பரிதி.

வாழ்த்துரையை வழங்கிய திருமறைக் கலாமன்ற இயக்குநர் பேராசிரியர் நீ.மரிய சேவியர் அடிகளார் தனது உரையில் தெரிவித்ததாவது:-

கவிஞர்கள் வருவார்கள் போவார்கள். ஒரு சில கவிஞர்கள் ஒருநாளைக்கு ஓர் இலட்சியமும் மறுநாளைக்கு வேறு இலட்சியமும் தங்களுடைய அடித்தளமாகக் கொண்டு செயற்படுவார்கள்.

பாரதி ஓர் இலட்சிக் கவிஞன் என்றுமட்டும் தான் நாம் அவனது தனித்துவத்தைப் பார்க்கின்றோம்.

அவனுக்குப் பின்னால் இலட்சியத்தை - வாழ்வைக் கவிதையாக மாற்றிய கவிஞர்களுள் தமிழ்கூறும் நல்லுலகில் இற்றைவரைக்கும் ஒரு கவிஞன் தோன்றியிருக்கின்றான் என்றால் அது ஈழத்தில்தான் தோன்றியிருக்கின்றான்.

என்னுடைய எண்ணத்தில் பாரதிக்குப் பின்பு புரட்சிக் கவிஞனாக - இலட்சியக் கவிஞனாக - தன்னுடைய வாழ்வில் ஒரு புரட்சியை இணைத்து அந்த இலக்கியத்துடன் அன்றுதொட்டு இன்றுவரை மாபெரும் கவிஞனாக இருப்பவர் புதுவை இரத்தினதுரை.

யாமறிந்த புலவரிலேயே பாரதிக்குப் பின்னர் புதுவை இரத்தினதுரை ஆன்றோனாக மட்டுமல்ல, சான்றோனாகவும் விளங்குகின்றான். இது தமிழ்மொழியில் தருகின்ற ஒரு சிறப்பு.

ஆன்றோனுக்கும் சான்றோனுக்கும் வேறுபாடு இருக்கின்றது. ஆன்றோன் என்பவர் ஆழ்ந்த அறிவு படைத்தவன்; அறிஞனாக வாழ்ந்தவன். சான்றோன் என்பவன் சான்றாண்மை படைதது, தான் எதைத் தன்னுடைய கொள்கை என்று கூறுகின்றானோ அதனை வாழ்ந்து காட்டுபவன். தன்னுடைய கொள்கைக்குச் சான்று பகர்ந்து வாழ்பவன் அத்தகைய ஒரு சான்றோனாக இந்த புதுவை இரத்தினதுரை விளங்குகிறார்.

இங்கு மக்கள் பற்றி மக்களுடைய எண்ணங்களை - அவர்களுடைய கனவுகளை - எடுத்துக்காட்டுகின்ற தன்மை அவருடைய கவிதைகளில் உள்ளது.

ஜீத்தினுடைய இனப்பற்று, நாட்டுப் பற்று என்பன இந்தக் கவிஞனுடைய கவிதை வரிகளில் உண்டு. பாரதியினுடைய புரட்சி, மண் பற்று, மொழிப்பற்று என்பன இந்தக் கவிஞனின் அடிநாமமாக விளங்குகின்றது.

அதனால்தான் நான் இந்தக் கவிஞனில் தாகூரையும் காண்கின்றேன்; ஜீத்தையும் காண்கின்றேன். சிறப்பாக பராதிக்குப் பின் வருகின்ற புரட்சிக் கவிஞனாகப் பார்க்கின்றேன். இவன் தமிழ்மக்களாகிய எங்களுடைய சொத்து. அவன் படைகின்ற இலக்கியங்கள் எங்களுடைய சொத்து - என்றார் மரியசேவியர் அடிகளார்

(த-203-7-86-31)

## நாளை தமிழீழ மாணவர் எழுச்சிநாள்

# நசிந்து இனிக் கிடக்கமாட்டோம் என்ற கோஷத்துடன் அணிதிரளுமாறு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்1

எம்மீது திணிக்கப்படுகின்ற அடக்குமுறைகள், அராஜகங்கள், கலாசாரச் சீரழிவுகள், தரப்படுத்தல்கள், பாரபட்சங்கள் என்பவற்றுக்கு எதிராக எழுந்துநின்று குரல்கொடுப்போம். நசிந்து இனிக் கிடக்கமாட்டோம். நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம் என்ற கோஷத்துடன் உரிமைகளை வென்றெடுப்போம்.

- நாளை கொண்டாடப்படவுள்ள தமிழீழ மாணவர் எழுச்சி நாளையொட்டி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு முன்னரே தமிழ் மாணவர் சமூகத்தினராகிய நாம் எம்மீது திணிக்கப்பட்ட அடக்குமுறைகள், அராஜகங்களுக்கு எதிராகக் குரல்கொடுக்கத் தொடங்கி விட்டோம். ஆனால், அன்று தமிழ் மாணவர்கள் மீது தரப்படுத்தலை ஆரம்பித்த ஸ்ரீலங்கா அரசின் திணிப்புகள் மூன்று தசாப்தங்களின் பின்னரும் மாற்றமடையவில்லை. அது இன்றுவரை வெவ்வேறு வடிவங்களில் திணிக்கப்பட்டே வருகின்றன.

குறிப்பாகத் தமிழ் மாணவர்கள் கல்வி கற்கப் பயன்படுத்துகின்ற புத்தகங்கள் திட்டமிட்டே ஸ்ரீலங்கா அரசினால் எழுத்துப் பிழைகளுடனும் கருத்து வேறுபாடுடனும் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கு மேலாக வரலாறுகள் திரிபுபடுத்தப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் கல்வி கற்ற தமிழ் மாணவர்கள் கந்தளாய்க்குளம் குளக்கோட்டன் என்ற தமிழ் மன்னனால் கட்டப்பட்டது என்ற வரலாற்றை இதே ஸ்ரீலங்கா அரசினால் வழங்கப்பட்ட பாடநூல்களில் கற்றவர்கள். ஆனால், இன்று சில ஆண்டுகளாக அதே குளத்தை சிங்கள மன்னன் ஒருவன் கட்டியதாக வரலாறுகள் எங்கள் கண்முன்னே திரிபுபடுத்தப்பட்டுள்ளது. இது ஒரு சிறு உதாரணம் மட்டுமே. இவ்வாறாக ஸ்ரீலங்கா அரசு கல்வி என்ற தனது கொள்கைக்கூடாக எம் மீது வரலாறுகளைத் திரிபுபடுத்தி திணிக்க எண்ணுகின்றது.


ஸ்ரீலங்கா அரசின் கல்விக் கொள்கையில் முதன்மைப்படுத்தப்படுவது 'மகிழ்ச்சியான கல்வி' என்பதே. ஆனால், தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை இது பொய்த்துவிட்டது. இராணுவ ஆயுதங்களுக்கு மத்தியிலும் இராணுவச் சீருடை, இராணுவச் சப்பாத்துக்களுக்குக் கீழும் இருந்து எவ்வாறு மகிழ்ச்சியான கல்வியைக் கற்கமுடியும்? இன்றுவரை பல பாடசாலைகள் இராணுவ முகாம்களாகவேயுள்ளன. இன்னும் பல பாடசாலைகள் இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவ ஆக்கிரமிப்பின் நடுவிலேயே இயங்கிவருகின்றன.

இவ்வாறான கொடுமைகளுக்கு எதிராகவே இற்றைக்கு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் மாணவனாக விளங்கிய தியாகி பொன். சிவகுமாரன் போராடி வீரச்சாவடைந்தான். அவன் வழியில் எமது பயணத்தைத் தொடர்வோம் - என்றுள்ளது.

(8)

# 'சுனாமி' பொன்னாங்காணி

அன்றாடம் நாம் உட்கொள்ளும் உணவில் இலைமரக்கறிகளின் இருக்கையென்பது எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாதது. கறியாக - சம்பலாக - வறுவலாக - என இன்னும் பற்பல வடிவங்களை இலைக் கறிகள் பெற்று நிற்கின்றன.



குடாநாட்டில் பெரும்பாலும் இயற்கையாகவே வளரும் தன்மை கொண்டனவாக காணப்படுகின்ற இலைமரக்கறிகளாக பொன்னாங்காணி, சிறுகீரை, வல்லாரை, அகத்தி, கறிமுருங்கை, கங்கூன்கீரை, குறிஞ்சா, தூதுவளை, கறிவேப்பிலை, மொசுமொசுக்கை, பசளி என்பவற்றைத் தொடர்ந்து பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம்.




அண்மையில் மானிப்பாய், நவாலிப் பகுதிகளில் புதியவகைப் பொன்னாங்காணியொன்று பயிர்செய்யப்பட்டு வருகின்றது. இது அனைவராலும் செல்லமாக 'சுனாமி பொன்னாங்காணி என அழைக்கப்படுகின்றது. இந்தப் பெயர் ஏற்படக் காரணம் என்னவென்று நோக்கின். இது முதன் முதலாக இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் பயிர்செய்யப்பட்டுவந்தது. பின்னர், கடந்த வருடம் இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்த காலப்பகுதியில் குடாநாட்டுக்கு எடுத்துவரப்பட்டு பயிர் செய்யப்பட்டது. இதனாலேயே, செல்லமாக இதனை 'சுனாமி பொன்னாங்காணி' என்கின்றனர். இது முதன் முதலாக பரீட்சார்த்த மாகவே செய்கை பண்ணப்பட்டது. பின்னர் அது வெற்றியளித்ததைத் தொடர்ந்து பயிர்ச் செய்கை மேற்கொள் ளப்பட்டது.

இந்தப் பொன்னாங்காணி (Alternaria Sessilis) உள்ளூர் இனத்தைச் சாராத வேறு ஓர் இடத்திற் குரிய இனமாகும் (Exotic Varieny)

சாதாரண பொன்னாங்காணியுடன் 'சுனாமி பொன்னாங்காணியை' ஒப்பிட்டு நோக்கினால் இப்புதிய வகைப் பொன்னாங் காணியில் -

(i) இலைகளின் தடிப்பு ஒப்பீட்டளவில் குறைவாகவும்,

(ii) தண்டுப்பகுதி மொத்தமானதாவும்,

(iii) இலைகள் பெரியனவாகவும்,

(iv) பூச்சித் தாக்கங்களுக்கும் நோய்த் தாக்கங்களுக்கும் எதிர்ப்புத் தன்மையுள்ளனவாகவும் காணப்படுகின்றது.

அத்துடன், ஏனைய இலைமரக்கறிகளுக்குப் பயன்படுத்துவதைப் போன்று கிருமி நாசினிகளோ, பூச்சிநாசினிகளோ இப்பொன்னாங்காணிக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. எனவே, நுகர்வோரைப் பொறுத்தமட்டில் உடலுக்கு ஆரோக்கியமான தெனக் கருதப்படுகின்றது.

யாழ். மாவட்ட விவசாய ஆராய்ச்சித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்தமான பயிர்ச் செய்கையின்போது பயிர்களுக்கு இடையிலான இடைவெளி 30x30cm ஆக பேணப்பட்டது. பயிர்செய்யப்பட்டு முதலாவது அறுவடை 28-30 நாள்களில் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் 2 ஆவது. 3ஆவது அறுவடைகள் முறையே அடுத்துவருகின்ற 20 நாள்களின் பின்னர் மேற்கொள்ளப்பட்டன.



**பசளைப் பிரயோகம்**

பெறப்படும் விளைவினை ஒப்பிட்டு நோக்குதற்காகச் சேதனப் பசளையையும், அசேதனப் பசளையையும் பாவித்து பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

சேதனப் பசளையாக - பூவரசம் இலைகள் நீரில் இடப்பட்டு ஒரு கிழமை காற்றின்றிய நிலையில் ஊறவைக்கப்பட்டு அதிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட திரவமே பயன்படுத்தப்பட்டது.

அசேதனப் பசளையாக - விவசாயத் திணைக் களத்தினால் சிபார்சு செய்யப்பட்ட சாதார ணமான அளவுகள்.

கிழமைக்கு ஒரு தடவை பசளைப் பிர யோகம் சிபார்சு செய் யப்பட்ட அளவுகளில் மேற்கொள் ளப்பட்டது.

**நீர்முகாமைத்துவம்**

நான்கு நாள்களுக்கு ஒருமுறை நீர்பாய்ச்சுதல் வேண்டும்.

முதலாம் அறுவடையின் பின்னரேயே அசேதனப் பசளை பாவிக்கப்பட்டது. [illegible] அசேதனப் பசளையைப் பாவித்து அறுவடை செய்யும்போது தண்டின் கணுக்களுக்கிடையிலான நீளம் கூடுதலாகக் காணப்படுவதுடன். இலை, தண்டுகளுக்கிடையிலான விகிதம் (உலர் திணிவு) குறைவாகக் காணப்படுவதால் இப்பொன்னாங்காணியின் விளைத்திறனான பகுதி குறைவடைகின்றன.

பொதுவாக, இவ்வகைப் பொன்னாங்காணி வறுத்தும், கறிசமைத்தும் உண்பதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. எனவே, இல்லத்தரசிகளே! நீங்களும் உங்கள் கைவண்ணத்தை ஒருமுறை காட்டிப்பாருங்களேன்!

**காந்தன்,**
விவசாய பீடம், யாழ்.பல்கலைக்கழகம்

| விளைச்சல் | | |
|---|---|---|
| | சேதனப் பசளை (mt/ha) (மெற்றிக்தொன் / ஹெக்ரெயர்) | அசேதனப் பசளை (mt/ha) |
| முதலாம் அறுவடை | 13.2 | 9.2 |
| 2ஆம் அறுவடை | 7.62 | 13.6 |
| 3ஆம் அறுவடை | 16.8 | 21.6 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சம்பளக் கொடுப்பனவுக் கோரிக்கையை முன்வைத்து திக்கம் வடிசாலை ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதையும் கள் நிரப்பப்பட்ட கொள்கலன்கள் வேலை நிறுத்தத்தால் வாகனத்திலிருந்து இறக்கப்படாமல் இருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர்)

# ஜனாதிபதித் தேர்தலால் சு.கட்சிக்குள் பூசல்!

கொழும்பு, ஜூன் 1

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வருவதை அடுத்து ஆளும் கூட்டமைப்பின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் குத்து வெட்டு, குளறுபடிகள், குழுமோதல்கள் அதிகரித்துவிட்டன.

கட்சியின் உயர் வட்டாரங்களை இந்நிலைமை பெரும் விசனத்துக்குள் ஆழ்த்தியிருப்பதாகவும் தெரிகிறது.

தற்போதைய ஜனாதிபதியும், கட்சித் தலைவியுமான சந்திரிகா குமாரதுங்கவின் இரண்டாவது பதவிக்காலம் இப்போது அந்தத்தை எட்டியிருக்கின்றது.

தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகளின் படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியாது. அவர் இத்தேர்தலில் போட்டியிடக் கூடியவகையில் அரசமைப்பை மாற்றுவதும் இப்போதைக்குச் சாத்தியமானதல்ல என்பதும் மெல்ல மெல்ல உறுதியாகி வருகிறது.

இந்நிலைமையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அல்லாத இன்னொருவரையே சு.க.தனது ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்க வேண்டியிருக்கிறது. இதுவே, கட்சிக்குள் நெருக்கடியைத் தோற்றுவித்திருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வேட்பாளர் விவகாரத்தால் கட்சிக்குள் பெரும் பிளவு ஒன்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உருவாகி வருவதாகக் கட்சியின் உயர்மட்ட வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் தயாராகி வருவதே இதற்குப் பிரதான காரணமாகும்.

ஏற்கனவே, ஜனாதிபதித் தேர்தலுக்காக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தம்மை தயார்படுத்திவரும் சூழ்நிலையில் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான அனுரா பண்டாரநாயக்க, டி.எம்.ஜயரட்ன, சரத் அமுனுகம, ரட்ணசிறி விக்கிரமநாயக்கா ஆகியோரும் இந்த விடயத்தில் களமிறங்கியிருக்கின்றனர் எனத் தெரியவருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகிவரும் இந்த உறுப்பினர்கள் கட்சிக்குள் தமக்கு ஆதரவைத் தேடுவதற்காக இரகசியமான செயற்பாடுகளை மேற்கொள்ள ஆரம்பித்திருப்பதால் கட்சிக்குள் பெரும் பிரச்சினைகள் தலைதூக்கத் தொடங்கியுள்ளன எனவும் இதன் விளைவாக கட்சியில் பாரதூரமான நிலைமை ஏற்படக்கூடுமெனவும்,

பெயர் குறிப்பிட விரும்பாத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரொருவர் தெரிவித்தார். ஏற்கனவே, ஐ.தே.க.தலைவர் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் பணிகளை ஆரம்பித்திருப்பதால் இந்த விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும்உறுதியான தீர்மானமொன்றை விரைவில் எடுக்க வேண்டிய கட்டாயம் இருப்பதாகக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கருதுவதாகத் தெரியவருகிறது.

## ஜனாதிபதித் தேர்தலில் ஹெல உறுமயவும் போட்டி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஜாதிக ஹெலஉறுமய தீர்மானித்துள்ளது.

அக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேத்தானந்த தேரர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"இந்நாட்டு அரசியல் தலைவர்கள் தமது கட்சி அரசியலினால் நாட்டைக் காட்டிக்கொடுக்கும் வகையில் நடக்கின்றனர். அவர்கள் எடுக்கும் முடிவுகளால் நாடு, மதம்,சுற்றுச் சூழல் என்பன பெரும் சீரழிவுக்குள்ளாகி நாடு அதலபாதாளத்தை நோக்கிச் செல்கிறது.

"ஜனாதிபதி போன்ற பதவிகளின் பின்னால் ஒளிந்து கொண்டு இருப்பவர்கள் மக்களின் உரிமைகளைக் காட்டிக்கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அதற்கு நேரடியாக முகங்கொடுக்க சவால்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. இதற்காகவே ஜாதிக ஹெல உறுமய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் உறுதியாகவுள்ளது" - என்றார் மேத்தானந்த தேரர். (க-8)

## புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல. 9 விடைகள்

நேற்றைய 'உதயனில்' வெளியான ஐந்தாம் தரத்துக்குரிய புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல.9 இற்கான விடைகள் வருமாறு:-

### வினாத்தாள் - I

| | | | |
|---|---|---|---|
| (01) 2 | (02) 1 | (03) 3 | (04) 4 |
| (05) 2 | (06) 4 | (07) 3 | (08) 3 |
| (09) 2 | (10) 3 | (11) 2 | (12) தமிழ்/உடற்கல்வி |
| (13) அழகியல் | (14) நிவேதிகா | (15) 5 | (16) 1 |
| (17) 2 | (18) 4 | (19) 2 | (20) 4 |
| (21) இல்லை | (22) ஆம் | (23) இல்லை | (24) 3 |
| (25) 3 | (26) 2 | (27) 2 | (28) 3 |
| (29) 3 | (30) 2 | (31) 1 | (32) 2 |
| (33) 3 | (34) 20 | (35) 10 | (36) 49 |
| (37) 21 | (38) அதிக உரம் உபயோகிக்க வேண்டும் | | |
| (39) தாவரபட்சனி | (40) கண்காட்சியாகும் | | |

### வினாத்தாள் - II

(01)
1) ஒழுக்கம் 2) ஆர்வத்தோடு
3) தந்தை தாயைப் பேணல்
4) உலக மக்களோடு ஒற்றுமையாக வாழுதல்
5) அல்லும் பகலும் 6) பட்டம்
7) அறம் 8) சிறிது
9) தந்தை 10) நீங்கள் 11) பட்டங்கள்

(02)
1) இலங்கை இந்துசமுத்திரத்தின் நித்திலம் என அழைக்கப்படுகின்றது.
2) ஒன்றின் இயல்பை அறிய முன் அதனைச் செய்யத்தொடங்காதே.

(03)
1) நிறையச்சம்பாதித்தல் 2) கொடுத்த வாக்கை மீறல்

(04)
1) சவர்க்காரம் 2) முல்லை மலரின்

(05)
1) கலகல 2) கஜகம

(06)
1) அ) இஸ்லாமியர்
ஆ) திருக்குர்ஆன்
இ) 1.ரம்ழான் 2. ஹஜ்
2) அ) இந்துக்கள்
ஆ) வேதசிவாகமம்
இ) 1.தீபாவளி 2.நவராத்திரி
3) அ) கிறிஸ்தவர்கள்
ஆ) பைபிள்
இ) 1.நத்தார் 2.ஈஸ்டர்
4) அ) பௌத்தர்கள்
ஆ) திரிபீடகம்
இ) 1.வெசாக் 2.பொசன்

(07)
1) A- 1m 40cm B- 2m 80cm
2) 9 சதுர சென்றிமீற்றர்
3) 9 கழிந்து பதினைந்து நிமிடங்கள்
4) 1X
5) 1. கூம்பு
2. 1.

(08)
1) 6ℓ 150ml 2) 6ℓ 975ml 3) 7ℓ 700ml 4) 8ℓ 225ml
5) 8ℓ 950ml 4) C, D

(09)
A) 3 B) 5 C) 1 D) 4 E) 2

(10)
1) 4 2) 3 3) 2 4) 3 5) 1
6) 2 7) 3 8) 3 9) 2 10) 2

(11)
1) My Name is Raja 2) That is a small bus

(12)
1) crow 2) Monkey 3) Door 4) Hospital

(13)
1) பறவைகள் 2) வண்ணாத்துப்பூச்சி
3) உணவு 4) கூடு

(14)
1) 10.15 மணித்தியாலயம் / மு.ப.10.15
2) ரூபா 24.50 3) 43 4) 878 5) 750mm

(15)
பொருத்தமான வசனங்கள்

புள்ளித்திட்டம்

வினாத்தாள் I :

40x2½ = 100 புள்ளிகள்

வினாத்தாள் II :

1) 11 புள்ளிகள் 2) 4 புள்ளிகள் 3) 2 புள்ளிகள்
4) 2 புள்ளிகள் 5) 2 புள்ளிகள் 6) 16 புள்ளிகள்
7) 10 புள்ளிகள் 8) 6 புள்ளிகள் 9) 5 புள்ளிகள்
10) 10 புள்ளிகள் 11) 2 புள்ளிகள் 12) 4 புள்ளிகள்
13) 4 புள்ளிகள் 14) 10 புள்ளிகள் 15) 12 புள்ளிகள்


திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு

★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.



T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467.

தொடர்பு: ...,
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22,சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


## துயர் பகிர்கின்றோம்



அகில இலங்கை அஞ்சல் - தந்தித் தொடர்புகள் சேவையாளர்சங்க யாழ். கிளையின் யாழ்ப்பாண அஞ்சல் அலுவலக அங்கத்துவ சகோதரர்

திரு. சி.ரவீந்திரன்

அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி யோகம்மா சிவகுருநாதன்**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு நாம் மிகவும் துயரமடைவதோடு அன்னாரின் பிரிவால் வருந்தும் குடும்பத்தின் துயரை நாமும் பகிர்ந்து கொள்கின்றோம்.

அகில இலங்கை அஞ்சல் - தந்தித் தொடர்புகள் சேவையாளர் சங்கம். யாழ்.மாவட்டம்.

தலைவர், செயலாளர், நிர்வாகிகள், அங்கத்துவ சகோதரர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 11 - 06 - 1931



மறைவு 02 - 05 - 2005

**மார்க்கண்டு இராசமணி**

பெற்றெடுத்த நாள் முதலாய் பிரியமுடன் எமை வளர்த்து
அன்போடும் பண்போடும் அரவணைத்து அறிவூட்டி
பிள்ளைகளைப் பிரியமுடன் வழிநடத்தி நின்றீரே!
எம்மையெல்லாம் கதறவைத்து எங்குசென்றீர் அம்மாவே?
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன அம்மாவென்றழைக்க
நீங்கள் இல்லையே!
அன்பின் குலவிளக்கே! எம் பாசதீபமே!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இன்று (01-06-2005) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மற்றும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மெமோறியல் றோட்,சங்குவேலி, பிள்ளையார் கோயிலடி.

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பாலர் வேலுப்பிள்ளை



ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் விசுவமடு 12ஆம் கட்டையடியை வசிப்பிடமாகவும் கொண்ட பாலர் வேலுப்பிள்ளை 30.05.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் இலட்சுமியின் அன்புக் கணவரும் பாலசிங்கம் (கனடா), சந்தானம் (காங்கேயன் சிமெந்து கூட்டுத்தாபனம்), தர்மரத்தினம் (லண்டன்), இரத்தினசிங்கம் (முன்னாள் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர், மாவீரர் மேஜர் முரளி), இராஜகோபால் (மாவீரர் தம்பி) ஆகியோரின் அன்புத் தந்தையும் செங்கமலர் (கனடா), கிருஷ்னேஸ்வரி, விக்னேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் மாமனும் சுயநிதா (கனடா), றஜீபன் (கனடா), தனுஷன் (லண்டன்), கபிந்தன் (லண்டன்) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், இளையதம்பி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.06.2005) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சர்வோதய வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

தகவல்
குடும்பத்தினர்.


திருமணக்கார் வாடகைக்கு

குளிரூட்டியது

(திருமண,விசேட, சுற்றுலா வைபவங்களுக்கு)

சிவா வீடியோ லைபிறறி

இராமலிங்கம் வீதி,
மூடமாவடி
(பூங்கனிச் சோலை அருகில்).



உடன் விற்பனைக்கு

ஒரு கைப்பாவனையில் உள்ள 12 Sri XXXX தொடர் இலக்கமுடைய Nisson Sunny B.310 நீல நிறகாரும் 202 XXXX இலக்கமுடைய பட்டர்கலர் ஆட்டோவும் லுமாலா சைக்கிள் (பெண்கள்) ஒன்றும் உடன் விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம். தரகர் தேவையில்லை.

தொடர்பு: ஷென்மென் அக்குபஞ்சர் நிலையம்,
சிவராஜா அவெனியு,
... சந்தி, பலாலி வீதி, ...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயவனூரில் வீரமுரசு நிகழ்வும் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும்

வட்டக்கச்சி,ஜூன் 1

மாவடி, மாயவனூர் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவித்தலும் வீரமுரசு நிகழ்வும் கடந்த 28ஆம் திகதி கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையில் நடைபெற்றன. வட்டக்கச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ச.பொன்னுத்துரை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச்சுடரினை கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தம் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் அருள் ஏற்றினார்.

நிகழ்வில் கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர், கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சுபசுபதிப்பிள்ளை, புலிகளின் குரல் நிறுவன துணைப் பொறுப்பாளர் செயல்வீரன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து மாயவனூர் மாலை நேர வகுப்பு மாணவர்களதும் அறிவுச் செல்வன் மாலை நேர வகுப்பு மாணவர்களதும் கலை நிகழ்வுகளும் தமிழீழ மகளிர் இசைக்குழுவின் இசை நிகழ்வும் இடம்பெற்றன. (ஒ-405-202)

## மீனவர் சமாசத்துக்கு வாகனங்கள் அன்பளிப்பு

திருவையாறு,ஜூன் 1

'ஒக்ஸ்பாம்' நிறுவனம் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்திற்கு குளிர்சாதனப் பெட்டியுடன் கூடிய இரு வாகனங்களை வழங்கவுள்ளது.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்களின் சந்தைவாய்ப்பை ஊக்குவிக்கவே இந்த வாகனங்கள் வழங்கப்படவுள்ளன. இவற்றை வழங்குவதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்றும் - வைபவரீதியாக அவற்றைக் கையளிக்கும் நிகழ்வு விரைவில் நடைபெறவுள்ளது என்றும் - 'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தினர் தெரிவித்தனர். (ஒ-393-203)

**கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்**

## பண்டாரவன்னியன் கிராமத்தில்

# கழிவாற்று நீரை விவசாயத்துக்கு பயன்படுத்தும் முயற்சி வெற்றி

ஒட்டுசுட்டான்,ஜூன்1

கழிவாற்றின் மூலம் வீணாக வெளியேறும் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் பண்டாரவன்னிக் கிராம மக்களின் முயற்சி வெற்றியளித்துள்ளது.

மிக நீண்டகாலமாக அப்பகுதிக் கழிவாற்றின் மூலம் தண்ணீர் வெளியேறி வீணாகக் கடலைச் சென்றடைந்தது. இதை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் நோக்கில் மேற்படி கிராம மக்கள் நீர்த்தடுப்பு அமைத்து தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இம்முயற்சி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து நூற்றுக்கும் மேற்பட்ட செய்கை பண்ணப்படாத காணிகளில் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை- தற்காலிமாகப் போடப்பட்டுள்ள மேற்படி நீர்த்தடுப்பை நிரந்தர அணைக்கட்டாக அமைத்துத் தரும்படி கிராம மக்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தைக் கோரியுள்ளனர்.(ஒ-341-202)

# ஒட்டுசுட்டான், நெடுங்கேணியில் தமிழீழ வாகனப் பதிவு நாளை

கிளிநொச்சி,ஜூன்1

ஒட்டுசுட்டான் மற்றும் நெடுங்கேணி போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவுகளில் இதுவரை தமிழீழப் பதிவுகளை மேற்கொள்ளாத வாகனங்களுக்கான பதிவுகள் நாளை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுகள் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதில் வாகனங்களைப் பதிவுசெய்யவரும் வாகன உரிமையாளர்கள் கடவுச் சீட்டுக்கான அளவில் 2 கறுப்பு, வெள்ளைப் புகைப்படங்கள், குடும்பப் பதிவு அட்டை, ஆயப்பகுதித் தீர்வைச் சான்றிதழ் நிழற்பிரதி, அரச ஆவணங்களின் நிழற்பிரதி, 18 - 50 வயதுக்குட்பட்ட பிணையாளியின் குடும்பப் பதிவு அட்டை ஆகியவற்றையும் பதிவுக்குரிய வாகனத்தையும் கொண்டுவருமாறு தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் கேட்டுள்ளனர். (ஒ-202)

## தங்கச் சங்கிலி கண்டெடுப்பு

விசுவமடு,ஜூன்1

புதுக்குடியிருப்பில் இயங்கும் பாண்டியன் சுவையூற்றில் தங்கச் சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டுப் பிரதேச அரசியல்துறைப் பெறுப்பாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரங்காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு புதுக்குடியிருப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (ஒ-402-202)



சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உளவளத்துணைச் செயற்பாட்டு ஒருங்கிணைப்புக் கூட்டம் கடந்த 28ஆம் திகதி கிளிநொச்சியில் உள்ள வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் அலுவலகத்தில் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்ட அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைப் படங்களில் காணலாம். (ஒ-203)

## தாச்சிச் சுற்றுப்போட்டி

# இணுவில், கைதடி அணிகள் சம்பியன்களாகத் தெரிவு

வலி.வடக்கு,ஜூன்1

யாழ். மாவட்டத் தாச்சிச் சங்கம், வர்த்தக வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் ஆதரவுடனும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப் பிரிவின் அனுசரணையுடனும் நடத்திய தாச்சிச் சுற்றுப்போட்டியில் இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகமும் கைதடி அருள் விளையாட்டுக் கழகமும் இவ்வாண்டுச் சம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

ஆண்கள், பெண்களுக்கான இறுதி ஆட்டங்கள் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றன.

ஆண்களுக்கான இறுதி ஆட்டத்தில் இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகமும் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழகமும மோதின.

ஆட்டம் ஆரம்பமாகிய நேரம் முதல் முடிவடையும் வரை மிகவும் விறுவிறுப்பாகவும் இறுதி நேரம் வரை எந்த அணி வெற்றிபெறும் என்று எதிர்வு கூறமுடியாமலும் இருந்தது.

ஆட்டத்தில் 5:4 என்ற பழக்கணக்கில் இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகம் தாவடி காளி அம்பாள் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

**விளையாட்டு**

பெண்களுக்கான இறுதி ஆட்டத்தில் அரியாலை காந்தி விளையாட்டுக் கழகமும் கைதடி அருள் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கைதடி அருள் விளையாட்டுக் கழகம் 7:6 என்ற பழங்களினால் காந்தி விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டு சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

ஆண்களுக்கான போட்டியின் நாயகனாகக் கலாஜோதி விளையாட்டுக் கழகத்தைச் சேர்நத வசந்தனும் -

பெண்களுக்கான போட்டியின் நாயகியாக அருள் விளையாட்டுச் கழகத்தைச் சேர்ந்த செல்வி கவிதாவும் தெரிவுசெய்யப்பட்டனர். (3-86)

## வட்டக்கச்சி ம.வி. சதுரங்கத்தில் முதலிடம்

வட்டக்கச்சி,ஜூன்1

கரைச்சி கோட்டமட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற சதுரங்கப் போட்டிகளில் வட்டக்கச்சி மகா வித்தியாலயம் அதிக புள்ளிகளைப் பெற்று வெற்றியடைந்தள்ளது.

இந்தப் போட்டிகள் கடந்த 20 ஆம் திகதி கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன. போட்டிகளில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**15 வயதுப்பிரிவு**

**ஆண்கள் -** வட்டக்கச்சி ம.வித்தி., இராமநாதபுரம் ம.வித்தி.

**பெண்கள் -** வட்டக்கச்சி ம.வித்தி., இராமநாதபுரம் ம.வித்தி.

**19 வயதுப்பிரிவு**

**ஆண்கள் -** கிளிநொச்சி மத்திய கல்லூரி, வட்டக்கச்சி ம.வித்தி., இராமநாதபுரம் ம.வித்தி.

**பெண்கள் -** வட்டக்கச்சி ம.வித்தி., கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி.

முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்று வெற்றிபெற்ற அணிகள் கிளிநொச்சி வலய மட்டத்தில் போட்டியிடவுள்ளன. (3-405-203)

# முல்லை வலய தடகளப் போட்டி முடிவுகள்

முல்லைத்தீவு வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் இடம்பெற்ற தடகளப் போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன. 17 வயதுப் பிரிவினரின் முடிவுகள் வருமாறு:-

**17 வயதுப் பிரிவு**

**ஆண்கள்**

**100 மீற்றர் -** பி.பகீரதன் (வற்றாப்பளை மகா வித்தி.), எம்.எட்வேர்ட் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), பி.சுதர்சன் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை).

**200 மீற்றர் -** யு.சுரேஸ் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), எம்.தினேஸ் (செம்மலை மகா வித்தி.), எஸ்.ஐங்கரன் (தேவிபுரம் அ.த.க. பாடசாலை).

**400 மீற்றர் -** உ.சுரேஸ் (கொக்கிளாய் அ.த.க. பாடசாலை), எம்.தினேஸ் (செம்மலை மகா வித்தி.), எஸ்.ஐங்கரன் (தேவிபுரம் அ.த.க. பாடசாலை).

**800 மீற்றர் -** வி.சுகிர்தன் (விசுவமடு மகா வித்தி.), ரி.விஜிதரன் (வித்தியானந்தாக் கல்லூரி), எஸ்.நவநீதன் (வற்றாப்பளை மகா வித்தி.).

**1500 மீற்றர் -** ரி.விஜிதரன் (வித்தியானந்தாக் கல்லூரி), எஸ்நவநீதன் (வற்றாப்பளை மகா வித்தி.). வி.சுகிர்தன் (விசுவமடு மகா வித்தி.).

**110 மீற்றர் தடைதாண்டல் -** ரி.ரவிராஜ் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), பி.திலீபன் (செம்மலை மகா வித்தி.), ரி.ராகுலன் (குமுழமுனை வித்தி.).

**நீளம் பாய்தல் -** ரி.ராகவன் (கலைமகள் வித்தி.), உ.சுரேஸ் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), ரி.பரந்தாமன் (வித்தியானந்தாக் கல்லூரி).

**முப்பாய்ச்சல் -** ரி.ராகவன் (கலைமகள் வித்தி.), ரி.பரந்தாமன் (வித்தியானந்தாக் கல்லூரி), உ.சுரேஸ் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை).

**உயரம் பாய்தல் -** ரி.ராகவன் (கலைமகள் வித்தி.), எல்.டிசாந்தன் (தேவிபுரம் அ.த.க.பாடசாலை), எஸ்.திபியராஜ் (வித்தியானந்தாக் கல்லூரி).

**குண்டுபோடுதல் -** வி.கேதீஸ்வரன் (கலைமகள் வித்தி.), பி.சுதர்சன் (கொக்கிளாய் அ.த.க. பாடசாலை), எஸ்.ஐங்கரன் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை).

**தட்டெறிதல் -** வி.கேதீஸ்வரன் (கலைமகள் வித்தி.), வை.தமிழ்குமார் (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), ரி.சிந்துஜன் (முல்லைத்தீவு மகா வித்தி.).

**ஈட்டி எறிதல் -** வி.கேதீஸ்வரன் (கலைமகள் வித்தி.), [illegible] (முல்லைத்தீவு மகா வித்தி.).

**4X100 அஞ்சல் -** கொக்கிளாய் அ.த.க.பாடசாலை, செம்மலை மகா வித்தியாலயம்.

**4X400 அஞ்சல் -** கொக்கிளாய் அ.த.க. பாடசாலை, கலைமகள் வித்தியாலயம், செம்மலை மகா வித்தியாலயம்.

**பெண்கள்**

**100 மீற்றர் -** ரி.ஜெனனி (கலைமகள் வித்தி.), எஸ்.சுகிர்தா (புதுக்குடியிருப்பு றோ.க.வித்தி.), ஆர்.ராதிகா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி).

**200 மீற்றர் -** எஸ்.சுகிர்தா (புதுக்குடியிருப்பு றோ.க.வித்தி.), எஸ்.டிலக்சுமி (வள்ளிபுனம் அ.த.க.பாடசாலை), வை.சஞ்சிகா (கலைமகள் வித்தி.).

**400 மீற்றர் -** எஸ்.சுகிர்தா (புதுக்குடியிருப்பு றோ.க.வித்தி.), பி.விஜிதா (வித்தியானந்தா கல்லூரி), ஆர்.இராஜேஸ்வரி (அலம்பில் றோ.க.தமிழ்கலவன் பாடசாலை).

**800 மீற்றர் -** ஜே.ரெஞ்சிகா (வற்றாப்பளை மகா வித்தி.), பி.மேரிகனிஸ்ரலா (புதுக்குடியிருப்பு றோ.க.வித்தி.), எஸ்.சங்கீதா (வள்ளிபுனம் அ.த.க. பாடசாலை).

**1500மீற்றர் -** ஜே.கரன்சிகா (வற்றாப்பளை மகா வித்தி.), பி.மேரிகனிஸ்ரலா (புதுக்குடியிருப்பு றோ.க.வித்தி.), எஸ்நிரோஜா (முள்ளிவாய்க்கால் மேற்கு அ.த.க.பாடசாலை.

**100மீற்றர் தடைதாண்டல -** பி.தஸ்மிதா (வித்தியானந்தாக் கல்லூரி), கே.சோபிகா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), எம்.ஜெயப்பிரியா (கொக்கிளாய் அ.த.க. பாடசாலை).

**உயரம் பாய்தல் -** எம். ஜெயப்பிரியா (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), ஆர்.பாமதி (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), பி.மேரிகனிஸ்ரலா (புதுக்குடியிருப்பு றோ.க வித்தி.).

**நீளம் பாய்தல் -** ரி.ஜெனனி (கலைமகள் வித்தி.), எம்.ஜெயப்பிரியா (கொக்கிளாய் அ.த.க. பாடசாலை), ரி.ராஜநந்தினி (கலைமகள் வித்தி.),

**குண்டு போடுதல் -** ஏ.பிருந்தா (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), வை.சஞ்சிகா (கலைமகள் வித்தி.), எஸ்.நிவேதிகா (செம்மலை மகா வித்தி.).

**தட்டெறிதல் -** ஏ.பிருந்தா (கொக்கிளாய் அ.த.க.பாடசாலை), ஆர்.சாளினி (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), உ.தர்சினி (சுதந்திரபுரம் அ.த.க.பாடசாலை).

**ஈட்டி எறிதல் -** ஜே.சஜிதா (குமுழமுனை மகா வித்தி.). என்.கம்சினி (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ஏ.ரஸ்மிகா (உடையார்கட்டு மகா வித்தி.).

**4X100 அஞ்சல் -** புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, கொக்கிளாய் அ.த.க. பாடசாலை, வள்ளிபுனம் அ.த.க வித்தியாலயம்.

**4X400 அஞ்சல் -** வள்ளிபுனம் அ.த.க. வித்தி., புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, கொக்கிளாய் அ.த.க.பாடசாலை. (3-410)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையர் 11 ஆயிரம் பேருக்கு தென்கொரியாவில் வேலைவாய்ப்பு

தென்கொரியாவில் 11 ஆயிரம் இலங்கையர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை வழங்க தென்கொரியா முன்வந்துள்ளது. தென்கொரியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு சென்ற பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தென்கொரியப் பிரதமர் லீ ஹான் சென் இதற்கான உறுதியை வழங்கினார்.

கடந்த செவ்வாயன்று கொரியா சென்ற பிரதமரைத் தென்கொரியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஈ.எச்.விஜேசிறி ராஜபக்ஷவும் கொரிய அதிகாரிகளும் வரவேற்றனர்.

இதன்பின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தென்கொரியப் பிரதமர் லீஹான் சென்னை, சியோலில் அவரது இல்லத்தில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைப் பலப்படுத்தும் வகையில் இரு தலைவர்களும் பல்வேறு விடயங்கள் தொடர்பாக உரையாடினர்.

அண்மையில் ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணமாக 3 கோடி 50 லட்சம் அமெரிக்க டொலரை வழங்க தென்கொரியப் பிரதமர் உறுதியளித்துள்ளார். இதில் ஒரு கோடி 50 லட்சம் டொலர் நன்கொடையாக வழங்கப் பட்டுள்ளது என பிரதமரின் அலுவலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.


## ரஷ்ய பல்கலைக்கழகத்திற்கு மாணவர் அனுமதி

| | |
|---|---|
| மருத்துவப் பட்ட கற்கைநெறி (ஆங்கில மொழி மூலம்) | சர்வதேச அங்கீகாரம் பெற்ற ரஷியா TVER STATE MEDICAL ACADEMY யில் |
| பொறியியல் பட்ட கற்கைநெறி | ரஷியா ரீவர் பொறியியல் பல்கலைக்கழகத்தில் |
| குறைந்த கட்டணம் வங்கிக் கடன் வசதி (மீளச் செலுத்தும் காலம் 5 – 6 ஆண்டுகள்) | க.பொ.த.உ/த பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்திபெற்றோர் 2005 ஜூனில் க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ளோர் ஆகியோர் விண்ணப்பிக்கலாம். |

கற்கைநெறிகள் 2005 செப்ரெம்பரில் ஆரம்பிக்கவுள்ளன.
உடனே தொடர்புகொள்ளவும்.
ரஷிய கல்வி நிலையத்தின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி.
கே.ஆர்.இன்., பலாலி வீதி, கோண்டாவில்.
(திருநெல்வேலி விவசாயப் பாடசாலை அருகில்) T.P.: 021 2225110
(36053) (26-11-14)



அகவை அறுபதில் ஓய்வுபெறும் அதிபருக்கு

## சேவைநலன் பாராட்டு



### திருமதி கமலா குணராசா

(B.A.Dip.in Edu. S.L.P.S.I.)

அகவை அறுபதுவரை நல்லாசிரியையாகச் சிறந்த அதிபராகக் கல்விப் பணிபுரிந்து சேவையில் நிறைவு கண்டு இன்று (01-06-2005) புதன்கிழமை முதலாக அமைய பாடசாலையிலிருந்து ஓய்வுபெறும் அதிபர் திருமதி கமலா குணராசா அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன், அவரது ஓய்வுக் காலத்தில் அவர் சகல வளங்களையும் பெற்று நிறைவாக வாழ எல்லாம்வல்ல நல்லைக்கந்தன் அருளை வேண்டி மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உப அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்,
யா/நல்லூர் இந்து தமிழ்பெண்கள் பாடசாலை, நல்லூர்.
(36051)(26-11-14)


## சைக்கிள் திருட்டு அதிகரிப்பு!

சங்கானை,ஜுன்1

சங்கானைச் சந்தைப் பகுதியில் அடிக்கடி ஏற்படும் சைக்கிள் திருட்டுக்களினால் பொது மக்கள் தமது சைக்கிள்களை இழக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பெண்களுக்குரிய லூமாலா வைக்கிள் ஒன்று காலை 10 மணியளவில் சந்தைப் பகுதியில் திருடப்பட்டுள்ளது.

வார இறுதி நாள்களை விட கிழமை நாள்களில் குறிப்பாக திங்கட்கிழமைகளில் சங்கானையில் இயங்கும் வங்கி, சந்தை, பிரதேச செயலகத்திற்கென பொதுமக்கள் பலர் வருகிறார்கள் இந்நாள்களில் இத்திருட்டுச் சம்பவங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன. சங்கானைப் பொலிஸார் நடவடிக்கை எடுத்தும், ஏதோ ஒரு விதத்தில் 4 இல்லது 5 சைக்கிள்களுக்கு மேல் மாதாந்தம் இச்சந்தைப் பகுதியில் திருடப்படுவதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (8-29)

## கணனி அலகு திறப்பு

வடமராட்சி,ஜுன்1

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் மாலை நேர, வார இறுதி நாள்களில் நடத்தும் கணனிப் பயிற்சி நெறிகளின் ஆரம்ப நிகழ்வும் புதிய கணனி அலகு திறப்பு விழாவும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் செ.சேதுராஜா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலனும் சிறப்பு விருந்தினராக வைரநாதனும் கலந்துகொள்வர். (3-173)

## யோகாசன வகுப்பு

பொலிகண்டி, கந்தவனம் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோயிலில் பிரதி சனி, ஞாயிறு தினங்களில் இலவச யோகாசனப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு வருகின்றது.

கொழும்பு இந்து மாமன்றத்தின் ஆதரவில் நடைபெறும் இந்த வகுப்பில் ஆண்களும் பெண்களும் பயிற்சிபெற்று வருகின்றனர். (ஓ-173)

## வீடு கையளிக்கும் நிகழ்வு இன்று

வடமராட்சி,ஜுன்1

ஆழிப் பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பொலிகண்டி மேற்கு மீனவர்களுக்கு 'கியூடெக்' நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 20 தற்காலிக வீடுகள், பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கும் வைபவம் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் ... தலைமையில் நடைபெறும். (3-173)


Jayoda

## ஜயோதா

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6067980 முதல் 6082397 வரை
சீட்டிழுப்பு இல. 137 திகதி 30-5-2005

வெற்றி எண்கள் 2 9 6 0 1 4 சுப்பர் எண் 17

சுப்பர் ஜக்பொட் பரிசு 2,67,62,725/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| [illegible] | - | 2,67,62,725/- | - |
| [illegible] | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| [illegible] | 13 | 50,000/- | 6,50,000/- |
| [illegible] | 127 | 5,000/- | 6,35,000/- |
| [illegible] | 1,239 | 500/- | 6,19,500/- |
| [illegible] | 12,476 | 50/- | 6,23,800/- |
| [illegible] | 123,574 | 10/- | 12,35,740/- |
| [illegible] | 10 | 5,000/- | 50,000/- |
| [illegible] | 126 | 1,000/- | 1,26,000/- |
| [illegible] | 1,256 | 100/- | 1,25,600/- |
| [illegible] | 12,348 | 20/- | 2,46,960/- |
| மொத்தம் | 1,51,178 | | 59,15,200/- |

இந்த வியாழக்கிழமை
சுப்பர் ஜக்பொட்
ரூ. 2,71,02,450/-

6074235-6-02
6070845-0-86
6077318-6-37
6070424-4-24
6078300-0-56
60721[illegible]
60816[illegible]
6070293-5-96


## சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சிரமதானம்

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபை அமைந்துள்ள பண்டார மாளிகை வளவில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். மாநகர ஆணையாளரின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இச்சிரமதானப் பணியில் யாழ். மாநகர சபை ஊழியர்கள் அனைவரும் கலந்து கொள்ளவுள்ளனர். (12)


## பொதி செய்ய பெண் பிள்ளைகள் தேவை

முன்பு தொழிலகங்களில் பொதிகள் செய்து அநுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. கிராம சேவகர் அல்லது தொழிலதிபர் சிபாரிசுக் கடிதத்துடன் நேரில் வரவும். திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும். சம்பளம் நாளொன்றுக்கு 160/-

G.C.E. (OL) படித்தவர்கள் விரும்பத்தக்கது.

சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி (சத்திரத்துச் சந்திக்கு அருகில்),
யாழ்ப்பாணம்.
T.P.No: 021 222 2567.
(A/43140)(24-11-14-26)


## கண்ணீர் அஞ்சலி



வேலணைப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரான திரு.வைரமுத்து சுதாகர் அவர்களின் அன்புத் தந்தை

### கந்தன் வைரமுத்து

(முதலாம் வட்டாரம் - நயினாதீவு)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, கண்ணீர் அஞ்சலி சமர்ப்பித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,
பிரதேச செயலகம், வேலணை.
(36058)(26-11-14)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச கிராம அலுவலர்
திருமதி இராகினி இராமலிங்கம்
அவர்களின் அன்புத் தாய்

### திருமதி சேனாதிராசா மனோன்மணி

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புலோப்பளை மேற்கு, பளை.
திருமதி த.தர்மகுலசிங்கம் குடும்பம்,
திரு.ச.கந்தசாமி குடும்பம் (டென்மார்க்).
(36057)(26-11-14)

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 06 - 05 - 1916 | 05 - 06 - 2002 |

### திருமதி கந்தையா அன்னம்மா

திதி: அபரபக்கத் தசமி

பண்புக்கோர் உறைவிடமாய்
பாசமுடன் காத்த தாயே!
ஆண்டுகள் பல சென்றிடினும்
ஆறாதே எம் துயரம்!!

கொக்கன், இணுவில் கிழக்கு,
இணுவில். (36055)(16-11-14-26)
- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணி இராமலிங்கம்



வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தைச் சேர்ந்த திருமதி தவமணி இராமலிங்கம் 30-05-2005 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி இராமலிங்கம் (ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும் தாமோதரம்பிள்ளை, இராசதுரையின் அன்புச் சகோதரியும் மோகன் (பிரான்ஸ்), வனஜா, கோமதி, நந்தினி (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயகுமார் (துலாகலம் - கொடிகாமம்), யோகராசா (துலாகலம் - கொடிகாமம்), வரதராஜா (நோர்வே), நதனி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருவேரகன், வாகீசன், விதுஷா, அபினஜா, மயூரி, மாதுரி, நிவேதன், நிருபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மீசாலையைச் சேர்ந்த தெய்வானை பிள்ளை, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02-06-2005) வியாழக்கிழமை காலை 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கொற்றவெல இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.மோகன் (மகன் - பிரான்ஸ்).
வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்.
T.P.No: 0776589600. (36054)(26-11-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சா கைப்பற்றப்பட்டமை தொடர்பாக பெண்ணுக்கு விளக்கமறியல்

கொடிகாமம் பாலாவி வடக்குப் பகுதி வீடொன்றில் சட்டவிரோத போதைப்பொருளான கஞ்சா வைத்திருந்ததாகக் கூறப்படும் பெண்ணை இம்மாதம் 13ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார்.

சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான சுமார் 25 கிலோ நிறையுடைய கஞ்சா மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பாலாவி வடக்கைச் சேர்ந்த பெண் ஒருவர் கொடிகாமம் பொலீஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

இந்தப் பெண்ணை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும் படி நீதிவான் உத்தரவிட்டார்.

கைப்பற்றிய கஞ்ச செடிகளும் நீதிமன்றில் சான்றுப் பொருளாக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

(3-117)

## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை அதிபர்
திரு. சின்னத்தம்பி கந்தசாமி
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சின்னத்தம்பி செல்லம்மா**

அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலை, வரணி.

ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர்.
(36065)(22-38-14-12-45)

## கண்ணீர் அஞ்சலி

எமது கோட்டக்கல்வி அலுவலர் திரு.சி.இராமலிங்கம் அவர்களின் மாமியாரும் புலோப்பளை மேற்கு கிராம அலுவலர் திருமதி இராகினி இராமலிங்கம் அவர்களின் அன்புத் தாயாருமான

**திருமதி சேனாதிராஜா மனோன்மணி**

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - பளை) அவர்கள் 29.05.2005 அன்று காலமான செய்திகேட்டு நாம் மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் மறைவையிட்டுத் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி டைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்விக்கோட்டம், பளை.
(சி-43143(22-38-14-12-
அதிபர்கள், ஆசிரியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும்
திரு.க.கமலநாதன் அவர்களின் மைத்துனர்

**பிச்சன் செல்லத்துரை**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மசாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், பளை.

உதவிப் பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும்
(36063)(38-14-12-45)

## CCS
**College Of Computer Studies**
No. 119, Pointpedro Road, Nallur, Jaffna.

**சான்றிதழ் வழங்கும் வைபவம்**

இடம் : நாவலர் கலாசார மண்டபம், நாவலர் வீதி, நல்லூர்.
காலம் : இன்று (01.06.2005) புதன் பி.ப. 3.30 மணி
தலைமை : திரு. க.கைலைவாசன் *(இயக்குநர்)*
ஆசியுரை : ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் *(குருமுதல்வர் நல்லை ஆதீனம்)*
பிரதம விருந்தினர் : பேராசிரியர் P.பாலசுந்தரம்பிள்ளை Phd. Durham *(புவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர், முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.)*

அத்துடன் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- Director & Staff

(36059)(22-38-14-12-45)

## மரண அறிவித்தல்

### தில்லையம்பலம் கணநாதன்

**(இளைப்பாறிய தபாலதிபர்)**



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் 203, நாவலர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் கணநாதன் நேற்று (31.05.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் முத்தாச்சி தம்பதியினரின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரன் செல்வநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இந்திரநீலாவின் அன்புக் கணவரும் தில்லையானந்தி (கனடா), உமாசங்கர் (லண்டன்), சுகந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் முரளிதரன், சுதர்சனா, சிவகுமாரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பத்மநாதன், நகுலாம்பிகை, ஸ்ரீதேவி யோகநாதன் ஆகியோரின் சகோதரனும் கார்த்திகேசு, துரைராசா, மாலினி, இந்திரமலர், ரவீந்திரன் ஆகியோரின் மைத்துனரும் பிரணவன், சரவணன், லாவண்யா, சரண்யா, திவ்யா, சிவராம், மீரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2005) புதன்கிழமை மாலை 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*203, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.* (36061)(38-14-12-45)
*T.P.: 021 222 5111*

தகவல்: பிள்ளைகள்,
தி.பத்மநாதன் (சகோதரன்),
பொ.துரைராசா (மைத்துனர்).

## நெல்லை சில்க் அதிர்ஷ்டம்

இம்மாத பட்டுச்சேலைக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டு இல: 1159 அதிர்ஷ்டசாலி நேரில்வந்து பட்டுச்சேலையைப் பெற்றுக்கொள்ளவும். (சி-43149)(22-38-14-12-45)

**நெல்லை சில்க்**

## வெளிவந்து விற்பனையாகிறது

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான பௌதிகவியல் சுருக்கக் குறிப்புக்கள்.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
இல.04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி-43148)(22-38-14-12-45)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் முன்னணியில் திகழும் நகைக்கடை ஒன்றுக்கு கணக்கு எழுதத் தெரிந்த 35 - 50 வயதுக்குட்பட்ட ஆண் வேலையாள் ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு : (சி-43146) (22-38-14-12-45)
விளம்பர இல 2606,
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

## திருமணக்கார்

குளிரூட்டப்பட்ட நிசான் சனி திருமணத் தேவைகளிற்கு வாடகைக்கு உண்டு.
T.P.: 0777 283795 (C-42899)

## நாதன்ஸ் சினிமா

ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த

**அறிந்தும் அறியாமலும்**

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

## நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

ரஜினி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த

காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)



**சந்திரமுகி**

## மனோகரா யாழ்ப்பாணம்

தித்திக்குதே புகழ் ஜீவா, கஜாலா, ரகுமான், சரண்யா மற்றும் பலர் நடித்த

**ராம்**

காட்சி நேரம்: 10.30 a.m., 2.30 p.m., 6.30 p.m., 9.30 p.m.

## ராஜா யாழ்ப்பாணம்

புதிய வெளியீடு
லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி, லக்ஸ்மி, சுஜாதா, நிழல்கள்ரவி நடித்த

**ஆர்யா**

ஆக்ஷன் படம்.

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லப்பாக்கியம் தியாகராஜா (DR. வேல் அழகன்)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை சிவன்கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லப்பாக்கியம் தியாகராஜா (DR. வேல் அழகன்) நேற்று (31.05.2005) செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரகுநாதன் சின்னம்மாவின் அன்பு மகளும் ஞானரட்ணம், சின்னத்தங்கம்மா, தங்கம்மா, துரைச்சாமி, ஜெகதாம்பிகை, செல்லத்துரை, ராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் கேசவன் (USA), வாசுகி (கனடா), தேவகி ஆகியோரின் பாசமிகு தாயாரும் நளாயினி, சிவஞானநாதனின் அன்பு மாமியாரும் பிருந்தன், கீர்த்தன், துஷன், துஷா ஆகியோரின் பிரியமுள்ள பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (புதன்கிழமை) பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*சிவன்கோயிலடி, பருத்தித்துறை.*

தகவல்:
தி.தேவகி (மகள்)

## கண்ணீர் அஞ்சலி

பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கத்தின் உபதலைவரான திரு.சி.இராமலிங்கம் அவர்களின் அன்பு மாமியாரும் இச்சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.செ.சேனாதிராஜா அவர்களின் அன்பு மனைவியுமான

**திருமதி சே.மனோன்மணி**

அவர்கள் காலமானதையிட்டு மிகவும் மனம் வருந்துகின்றோம். அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கம், பளை. (36060) (38-14-12-45)

தலைவர், பணிப்பாளர், பணியாளர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### அமரர் அப்பாத்துரை கிருபைநாதன்

*(நில அளவைத் திணைக்கள இளைப்பாறிய உத்தியோகத்தர்)*



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை கிருபைநாதன் நேற்று (31.05.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அப்பாத்துரை - பொன்னம்மாவின் அன்பு மகனும் மகாலட்சுமியின் பாசமிகு கணவரும் அஜந்தன் (தொழில்நுட்ப மேற்பார்வையாளர், நியாப், யாழ்ப்பாணம்), ஜனனி, ஜோகிகா (மாணவி - இராமநாதன் கல்லூரி), இணுவில் மத்திய கல்லூரி மாணவர்களான ஜசிந்தா, உமாகரன், நிறோஜா, அரவிந்தன், திருசிகா, துளசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகநாதன், அமரர் கருணைநாதன், விமலநாதன், புஸ்பவனிதா, கமலநாதன், சிவநாதன், பாமா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கந்தசாமி, முருகையா, பரமேஸ்வரன், கனகலட்சுமி, நிர்மலாதேவி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2005) புதன்கிழமை காலை 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் கந்தசுவாமி கோயில் வடக்கு ஒழுங்கை, இணுவில் மேற்கு, இணுவில்.*

தகவல்:
அஜந்தன் (மகன்).
(36068)(38-14-12-45)

### திருமதி மயில்வாகனம் மாணிக்கம்



தம்பாட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மயில்வாகனம் மாணிக்கம் அவர்கள் நேற்று (31.05.2005) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா - பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் கந்தையா மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் நடராசா (பண்டிதர்), சாரதாதேவி, செல்வரட்ணம் (பிரான்ஸ்), அகிலாதேவி, பத்மாதேவி, லீலாதேவி (பிரான்ஸ்), உதயதேவி (ஆசிரியை - கரம்பன் சிறியபுஸ்ப மகளிர் மகாவித்தியாலயம்), பஞ்சவர்ணம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வண்ணமாலை, வடிவேலு (தம்பு), கோகிலா (பிரான்ஸ்), தியாகராஜா, மகாதேவன், அருமைராசா (பிரான்ஸ்), இளந்திரையன், ஜெயரட்ணம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2005) புதன்கிழமை அவரது இல்லத்தில் காலை 11 மணிக்கு இடம்பெற்று தகனக்கிரியைக்காக விறாட்டிமுனை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாரந்தனை வடமேற்கு, தம்பாட்டி.* (36067)(38-14-12-45)

தகவல்:
க. மயில்வாகனம் (கணவர்).

### கந்தன் வைரமுத்து



நயினாதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தன் வைரமுத்து அவர்கள் 27.05.2005 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2005) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சல்லிபரவை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முதலாம் வட்டாரம், நயினாதீவு.* (36064)(38-14-12-45)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி கந்தசாமி நல்லம்மா



இளவாலையைப் பிறப்பிடமாகவும் வட்டு. கிழக்கு, சித்தன்கேணியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி நல்லம்மா அவர்கள் நேற்று(31.05.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும் ஜெயலக்ஷ்மி, குலசிங்கம், காலஞ்சென்ற சற்குணசிங்கம் மற்றும் மகாலக்ஷ்மி, மங்களேஸ்வரி, இராசசிங்கம், ஜெயசிங்கம், சிவலக்ஷ்மி, புஸ்பலக்ஷ்மி, பத்மாவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரவீந்திரன், நீலாவதி, தனலக்ஷ்மி, கிரிதரன், கதிர்காமநாதன், திலகவதி, சசிகலா, காலஞ்சென்ற கிருபாகரன் மற்றும் கேதீஸ்வரன், யோகதாஸ் ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2005) புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

*வட்டு.கிழக்கு, சித்தன்கேணி.* (சி-43142)(38-14-12-45)

தகவல்:
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலனாய்வு அதிகாரி முத்தலிப் சுட்டுக்கொல்லப் பட்டதையடுத்து நேற்று நாரஹேன்பிட்டி வீதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதை படத்தில் காணலாம்.

## 11 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணுவ உயர்மட்ட அதிகாரியாவார். இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முதலாவது கட்டளையிடும் அதிகாரியான இவரைக் கொலை செய்வதற்குப் புலிகள் பலமுறை திட்டம் தீட்டிவந்துள்ளனர். நேற்று அவர்கள் தமது திட்டத்தை நிறைவேற்றியுள்ளனர். மேஜர் முத்தலிப்புக்கு புலிகளைத்தவிர வேறு எதிரிகளே கிடையாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். மேஜர் முத்த லிப் கொலை செய்யப்பட்டதை அடுத்த நாரஹேன் பிட்டி, கிருலப்பனை, பொரல்ல, வெள்ளவத்தை போன்ற பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களில் சென்றோர் பொலீஸாராலும், இராணுவத்தினரா லும் துருவித்துருவி விசாரிக்கப்பட்டனர். (க-3)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகன மற்றும் வீதிச்சோதனைகளையும் ரோந்துச் சோதனைகளையும் கொழும்பில் அதிகரிககுமாறும் ஜனாதிபதி படைத்தளபதிகளைப் பணித்துள்ளார்.

இதேவேளை, நேற்றைய கொலைச் சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு இரண்டு விசேட பொலீஸ் குழுக்கள் நியமிக்கப பட்டுள்ளன.

நடத்தப்பட வேண்டிய விசாரணைகள் குறித்தான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்றுப் பிற்பகல் பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவின் தலைமையில் பொலீஸ் தலைமையகத்தில் நடைபெற்றது. (க - 3)

# ரெலிக்கொம்மில் தீ விபத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவினருக்கு இது தொடர்பாகத் தகவல் தெரிவிக்கப் பட்டதையடுத்து அவர்கள் அங்கு விரைந்துவந்து தீயை அணைத்தனர்.

நீர் இறைக்கும் மோட்டார் ஒன்றிற்கு மின் வழங்கப்பட்ட வயரில் ஏற்பட்ட மின் ஒழுக்கே இந்தத் தீ அனர்த்தத்திற்குக் காரணம் என 'ரெலிக கொம்' நிறுவனத்தின் வடமாகாண பிரதிப் பொது முகாமையாளர் வி.யோகேந்திரன் தெரிவித்தார். விபத்து ஏற்பட்வுடன் உடனடியாகத் தீயணைப்புப் பிரிவினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்ட மையால் அவர்கள் விரைந்து வந்து மேலும் அனர்த்தம் ஏற்படாதவகையில் தீயை அணைத் தனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-12)

## நெருக்கடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதிகளும், சர்வதேச உதவும் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் அடுத்த வாரம் - ஜூன் மாத முற்பகுதியில் - கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் தலைவர்களைச் சந்தித் துப் பேசவுள்ளனர்.

அச்சந்திப்புக்களில், தற்போது எழுந்துள்ள அரசியல் நெருக்கடி தொடர்பான தமது நிலைப் பாட்டைச் சர்வதேச சமூகத்துக்குப் புலிகள் தெளிவாக எடுத்து விளக்குவார்கள் என்று அவர்களது அரசியல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாத முற்பகுதி முழுவதும் இந்தகைய இராஜீய சந்திப்புக்கள் இடம்பெறவுள்ளன என்று கிளிநொச்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பில் உள்ள உலக நாடுகளின் தூதுவர்களுக்கும் புலிகள் தமது நிலைப்பாட்டை விளக்கவுள்ளனர். எதிர்வரும் வியாழக்கிழமை கிளிநொச்சியில் சுவிஸ் நாட்டுத் தூதுவருடனான சந்திப்பு ஒன்றில் தமிழ்ச்செல்வன் கலந்துகொணடு நிலைமையை விளக்குவார் என்று தெரிவிக்கப் பட்டது.

"தமிழர்களுக்கு போரைத் தவிர மாற்றுத் தீர்வு ஒன்று இல்லை. விரைவில் போரை எதிர் பாருங்கள்" என்று கருத்துத் தெரிவித்து புலிகளின் சர்வதேச அலுவலகங்களுக்கு அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் வெளிவந்துள்ள நிலையில், புலிகளின் இந்த இராஜீய ரீதியான சந்திப்புக்கள் முக்கியத்துவம் பெற்றவையாக இருக்கின்றன எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (க-3)

## புதிய கட்டடங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதிகளான திருமதி டில்ருக்ஷான் விக்கிரம நாயக்க, டிலீப் நவாஸ், விக்கிரம ஆப்ரூவ் ஆகியோர் தாக்கல்செய்த மனு மீதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நகராட்சி மன்றத்துக்கு உரித்தான இடத்தில் சட்ட விரோதமான முறையில் புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளது என நீதிமன்றம் உறுதிப படுத்தவேண்டும் என்றும் -

அவ்வாறு உறுதிப்படுத்தும் பட்சத்தில் இந்த விவகாரத்தில் இறுதித்தீர்வைக் காணமுடியும் என்றும் - அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த மனுவை ஆராய்ந்த நீதிபதி, சம்பந்தப் பட்ட இடத்தில் வழக்கின் எதிரியாலோ அல்லது அவரது முகவராலோ புதிய கட்டடங்கள் அமைக்கப்படக்கூடாது, அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படக்கூடாது என இடைக்காலத்தடை உததரவைப் பிறப்பித்தார்.

எதிரியான கீர்த்தி பிரியலாவை நீதிமன்றத்தில் ஆஜராக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

நீதிவான் நீதிமன்றத்தின் கடந்த 18ஆம், 25ஆம் திகதிய விசாரணைக்கு அமைவாகத் தடையுத்தரவு நடைமுறையில் இருக்கும என்றும் நீதிபதி தெரிவித்து மேல் விசாரணையை எதிர்வரும் 13ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

அதேவேளை - புத்தர் சிலை அகற்றும் விவகாரம் தொடர்பாக இன்று திருமலையில் சமாதான மாநாடு ஒன்று நடக்கின்றது.

தமிழ்தரப்பு வழங்கிய காலக்கெடு இன்றுடன முடிவடையும் நிலையில் இன்று இந்த மாநாடு இடம்பெறுவது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலர், படை அதிகாரிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்கின்றனர். (3-151)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா பொன்னுக்கோன்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னுக்கோன் அவர்கள் 29.05.2005 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் திருமதி சாவித்திரியின் அன்புக் கணவரும் நடராஜா (அமரர்), இராசு (திருநெல்வேலி), தர்மலிங்கம் (அமரர்), முத்துலிங்கம் (வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரேஸ்வரன் (கொழும்பு), கருணதாஸ் (கட்டடநிர்மாணத் திணைக்களம், யாழ்ப்பாணம்), ஜெயக்கொடி (சுவிஸ்), முருகதாஸ் (சுவிஸ்), பூங்கொடி (சுவிஸ்), விஜயராஜ் (டென்மார்க்), சிவதாஸ் (சுவிஸ்), குகதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் சரோஜாதேவி (கொழும்பு), மங்களேஸ்வரி (திருநெல்வேலி), புஸ்பராஜ் (சுவிஸ்), உதயராணி (சுவிஸ்), விஜயகுமார் (சுவிஸ்), கௌரி (டென்மார்க்), சுதர்ஜினி (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும் யதீசன் (கொழும்பு), கஜேந்திரன் (கொழும்பு), யதுப்பிரியா (திருநெல்வேலி), மிரோஜன் (திருநெல்வேலி), கிரோஷன் (திருநெல்வேலி), தனுப்பிரியா (திருநெல்வேலி), பிரதீஷ் (சுவிஸ்), ஜதீஷ் (சுவிஸ்), ஆர்த்தி (சுவிஸ்), சாந்தமி (சுவிஸ்), தமிசான் (சுவஸ்), லாவண்யா (சுவிஸ்), ஆரண்யா (சுவிஸ்), சரண்யா (சுவிஸ்), நிவேதா (டென்மார்க்), அமீன் (டென்மார்க்), சுமி (டென்மார்க்), ஸ்ரீலா (சுவிஸ்), ஸ்ரீஜன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2005) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 1.00 மணிக்கு பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்திற்கு தகனஞ்செய்வதற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

*214/11, இராமநாதன் வீதி, திருநெல்வேலி.* (C-43151)(38-12-14-45)

## திருமதி செல்லையா தங்கம்மா



கோப்பாய் மத்தி, நாவலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா - தங்கம்மா 31.05.2005 அன்று காலமானார்.

அன்னார் செல்லையாவின் அன்பு மனைவியும் தில்லைநடராசா (சிறுவர் பாதுகாப்பு நிலையம், விசுவமடு), செல்வராசா (கனடா), தியாகராசா (கைதடி), அழகராசா (பிரான்ஸ்), தவமணிதேவி (விசுவமடு), சறோயினிதேவி (கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (01.06.2005) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கோப்பாய் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: செல்லையா (கணவர்).

*கோப்பாய் மத்தி, நாவலடி.* (36072)(38-12-14-45)

## குருநாதபிள்ளை அன்னம்மா (கண்மணி)

கீரிமலை வீதி, காங்கேசன்துறை ஐயனார் கோயிலடியைப் பிறபபிடமாகவும் இணுவில் கிழக்கு மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் குருநாதபிள்ளை அன்னம்மா (கண்மணி) அவர்கள் 31.05.2005 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2005) புதன் கிழமை மஞ்சத்தடியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 3 மணியளவில் கோண்டாவில் இணுவில் காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குருநாதபிள்ளை (கணவர் - முன்னாள் ஊழியர் காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்)

*மஞ்சத்தடி, இணுவில்.* (36073)(38-12-14-45)

## கண்ணீர் அஞ்சலி



மானிப்பாய் பிரதேச சபையின் சிரேஷ்ட சுகாதார மேற்பார்வை அதிகாரியாகக் கடமையாற்றும் திரு. அ.யோகநாதனின் மூத்த சகோதரர்

**அமரர் அ.கிருபைநாதன் (ராசன்)** - ஓய்வுபெற்ற நில அளவை உத்தியோகத்தர் நேற்று (31.05.2005) இறைபதம் அடைந்துள்ளார். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

செ.ரமேஷ். (ச.நி). உள்ளூராட்சி உதவியாளர். திட்டமிடற்பிரிவு, பிரதேசசபை, மானிப்பாய்.

HSCMF நவாலி. (C-43150)(38-12-14-45)

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா பாலதேவன் (காந்தன்)



காரைக்கால் வீதி, இணுவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா பாலதேவன் (காந்தன்), அவர்கள் 29.05.2005 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் அகாலமரணமானார்.

அன்னார் சின்னையா - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் சாந்தியின் அன்புக் கணவரும் சுரேஸ், கவிதா, சுதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரன் (கனடா), ரஞ்சன் (கனடா), நேசன் (சுவிஸ்), கெங்கா (கனடா), லீலா (சுவிஸ்), ரோசா, லாலா, பட்டு ஆகியோரின் அன்புச் சகோதரனும் தருமர், சந்திரன், ரவிச்சந்திரன் (சுவிஸ்), அருள் (கனடா), தனராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2005) புதன் கிழமை இணுவிலில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணிக்கு தகனக்கிரியைக்காகப் பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

*காரைக்கால் வீதி, இணுவில்.* (36070)(38-12-14-45)

## திருமதி தங்கம்மா வேலுப்பிள்ளை



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா வேலுப்பிள்ளை நேற்று (31.05.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற A.K.வேலுப்பிள்ளையின் (முன்னாள் ஆசிரியர்), அன்பு மனைவியும் இராஜ இரோஜேஸ்வரி, கணேஸ்வரன் (A.K.V), ஞானேஸ வரதேவி, இரத்தினேஸ்வரி, குகனேஸ்வரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற கனகசபாபதி (முன்னாள் உதவி அரசாங்க அதிபர் - ஒட்டிசுட்டான்), யமுனா, பரமேஸ்வரன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சிவலிங்கம் (இரத்தினா மோட்டோஸ், யாழ்ப்பாணம்), புஸ்பராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதன், நிவானி, ரமேஸ், சுமதி, கவிதா, தர்மசீலன் பிருந்தா, ஜீவனா, மனோஜிதன், ஜெயன், பிரதீபன் ஜெனனி, நிஷானி, கேமாலினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2005) புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சிவியாக்காட்டு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

*அரசகேசரி விநாயகர் வீதி, நீர்வேலி வடக்கு.* (36071)(38-12-14-45)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.